விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 29 சனிக்கிழமை (12.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## விடுதலைப்புலி உறுப்பினர்கள் எனக் கூறப்பட்ட

# கோபி உட்பட மூவர் சுட்டுக் கொலை!




(கொழும்பு)

**பாதுகாப்புப் படையினரால் தேடப்பட்டுவந்த கோபி என்றழைக்கப்படும் கஜீபன் பொன்னையா செல்வநாயகம் மற்றும் தேவியன் என்றழைக்கப்படும் சுந்தரலிங்கம் கஜீபன் ஆகிய இருவர் உட்பட மூன்று பேர் வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.**

விடுதலைப்புலிகளின் இப்போதைய உயர் மட்ட உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்பட்ட இவர்கள் இராணுவத்தினர் மேற்கொண்டிருந்த சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையொன்றில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோது இராணுவத்தினர்மேற் கொண்ட துப்பாக்

20 ஆம் பக்கம் பார்க்க..

## 2. ஆயிரம் படையினர் பங்கேற்பு!



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புதிய தலைவர் என்று கூறப்படும் கோபி என்றழைக்கப்படும் பொன்னையா செல்வநாயகம கஜீபன் உள்ளிட்ட குழுவினருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இராணுவ முன்னெடுப்பில் இரண்டாயிரம் படையினர் ஈடுபட்டதாக வன்னி படைத் தலைமையகம் தெரிவித்தது.

மேலும் விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் என அரசாங்கம் கூறும் கோபி என்பவருடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டதாக கூறப்பட்ட இராணுவ வீரர், இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிலேயே இறந்துள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் அவர் இராணுவ வீரர் அல்ல எனவும் இராணுவத்தினர் பயன்படுத்திவந்த உளவாளி எனவும் தெரிய வந்துள்ளது.

இந்த உளவாளி கொக்காவில் இராணுவ முகாமில் பணியாற்றிய செல்வராஜா கமலராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த உளவாளியின் கொலையை பயன்படுத்தி வேறு காரணம் ஒன்றை பிரசித்தப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பேசப்படுகிறது. (செ-11)

## சமூகப் பிரச்சினைகள் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)


இலங்கை மக்களில் 60 வீத மானவர்கள் மனநோயாளிகள் என மேல் மாகாண சமூக நலத் துறை பணிப்பாளர் அனுஷா கோகுல தெரிவித்துள்ளார்.

சமூக சேவை அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்காக கொழும்பு அரசாங்க அதிபர் அலுவலகத்

20 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கை ஒத்துழைக்காவிடினும் ஜெனிவா தீர்மானம் அமுலாகும்

**கூறுகிறார் சுமந்திரன் எம்.பி**



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைத்தாலும் கிடைக்காவிடாலும், இலங்கைக்கு எதிரான ஜெனிவா தீர்மானம் செயற்படுத்தப்படும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது தமிழ் மக்கள் பெற்ற வெற்றியாகும்.

இலங்கை தொடர்பில் நடத்தப்பட உள்ள விசாரணைகள், விசாரணையாளர்கள் இலங்கைக்கு வராமலேயே விசாரணைகளை நடத்த முடியும்.

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்திவெளி நாட்டில் இருநதே

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஷெல் குண்டுகளுடன் மூவர் கைது

(கொழும்பு)

ஷெல் குண்டுகளுடன் முஸ்லிம் இளைஞர்கள் மூவர் பளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் வான் ஒன்றில் ஷெல் குண்டுகளை ஏற்றிச் சென்றதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

34, 29, 21 வயதான இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் விரைவில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

(கொழும்பு)

இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரம் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் ஐந்து மீனவர்கள் காயமடைந்திருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து கடந்த புதன்கிழமை காலை 300-க்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். அவர்கள் கச்சத்தீவு, தனுஷ்கோடி கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, 3 கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர் 50-க்கும் மேற்பட்ட தமிழக படகுகளைச் சுற்றி வளைத்துள்ளனர். படகிலிருந்த மீனவர்களை நோக்கி கற்களை வீசித் தாக்கி விரட்டியடித்துள்ளனர்.

மற்றொரு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பேக்கரும்பு பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் படகு மீது மோதி கடலில் படகை மூழ்கடிக்க முயற்சித்ததில்

20 ஆம் பக்கம் பார்க்க..

Ranjanas
CERAMIC
For Quality Tiles & Sanitaryware
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
(C-6999)
Special offer
SALE UP TO 30% OFF
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு வாழ்த்துக்கள்



உ

எங்களுடன் இணைந்து முன்னேற்றப் பாதையில் தோளொடு தோள் நின்று பயணித்த தாங்கள் இப் புதிய ஜெய வருடத்திலும் எங்கள் முயற்சியில் இணைவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.



இத்துடன், எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு 14.04.2014 திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் 12 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் வெளிநாட்டிலிருந்து வெஸ்டன் யூனியன் மூலம் அனுப்பிய பணத்தை புதிய நோட்டுக்களுடன் பரிசுப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

(C-7006)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P No:- 021 222 5392, 021 222 2670

WESTERN UNION MONEY TRANSFER

---

## இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நிலவுரிமை பெற்ற நீர்ப் பயனாளிகளின் இடாப்பைத் திருத்துதல்

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் உரிமை பெற்றுக் கொண்ட நீர்ப்பாசன நிலங்களின் இடாப்பை மீளத் திருத்திக் கொள்வதற்கான குளக்குறியீட்டுப்பதிவேடு தயார்ப்படுத்துவதற்கென விண்ணப்பங்கள் மேற்குறிப்பிடப்படும் திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் அனைத்து நில உரிமையாளர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தினை தங்கள் பிரிவுக்கான பெரும்பாக அலுவலரின் காரியாலயத்திலோ, கிளிநொச்சி கமநல அபிவிருத்தி அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ள முடியும். உரிய மாதிரிப்படிவத்தில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அவ்வவ் விவசாயப் பெரும்பாகப்பிரிவு அலுவலர்களிடம் 15.05.2014 இற்கு முன்னராகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னராகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நீர்வரி இடாப்பின் திருத்தத்திற்கமையவே இனிவரும் காலங்களில் நீர் வழங்கல், உர விநியோகம், காப்புறுதி வசதிகள் என்பன அமுலாக்கப்படும் என்பதனையும் இத்தால் அறியத்தருகிறேன்.

அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-7008)

---

**TCT Multi Trade Centre** இலும் (527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
ஜெகன் களஞ்சியம் (447, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்)
இலும் விற்பனையாகின்றது.


தரத்தை விரும்புகிறவர்களுக்கு

மின் விளக்குகளுக்கு பயன்படுத்தும் மின்சாரத்தில் 75% – 90% சேமித்து தரும் **Double Energy Saving Para Lights HiGreen LED Bulbs** (Pin Type மட்டுமே இப்போது உள்ளது)

| | 3w=25w | 5w=35w | 5w=50w | 7w=70w |
|---|---|---|---|---|
| வாட்ஸ் சேமிப்பு | 22w | 30w | 45w | 63w |
| யாழ்ப்பாணத்திற்கான அறிமுக விலை | 400/= | 500/= | 700/= | 1000/= |




Para Lights இன் ஏனைய தயாரிப்புகள்



தரம் வேண்டாம் குறைந்த விலை வேண்டும் என்று கூறுபவர்களுக்கு
7w = 250/=, 9w = 300/=

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | நுளம்பு ராக்கெட் (Musquito Swatters) | 590/= | 02 | அவசர மின்விளக்குடன் மின்விசிறி (Emergency Light with Fan) | 990/= |
| 03 | அவசர மேசை விளக்கு (Emergency Table Lamp) | 790/= | 04 | LED லாம்பு மற்றும் பேட்டரி சார்ஜர் (Solar Lantern with 7 LED bulbs) | 990/= |

மொத்த கொள்வனவிற்கு 0789130813/ 0788745253 அழையுங்கள். (6127)

---

QA TECHNIC — Wish Wickramarachchi Institute of Speech & Hearing — Cochlear™

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே உங்கள் அனைவருக்கும் சித்திரை புது வருட நல்வாழ்த்துக்கள்

**J.M.WICKramarachchi & Co** இல் சித்திரை புதுவருட தினத்தை முன்னிட்டு மூக்குக் கண்ணாடிகளுக்கான விசேட விலைக்கழிவு 50% வரை வழங்கப்படும். மற்றும் கண் மற்றும் காது பரிசோதனைகளும் இம்மாத முழுவதும் இலவசமாக வழங்கப்படும்.

மற்றும் 40 வயது தொடக்கம் 50 வயது வரை உடையவர்களுக்கான வாசிப்பதற்குரிய மூக்குக் கண்ணாடிகளும் 16-ம் திகதி தொடக்கம் 17-ம் திகதிவரை இலவசமாக வழங்கப்படும்.

நன்றி

**ஜெ.எம்.விக்கிரமாராச்சி அன்ட் கம்பனி**
இல.229, 231 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 2219 288, 0777511260

(சி-7005)

---



## அகில இலங்கை யாழ் உரும்பிராய் சிவதர்மசாஸ்த்தா திருக்கோயில் (ஐயப்பன் ஆலயம்) 2014-ம் ஆண்டு ஜெய வருஷ வாழ்த்துக்கள்

### புது வருடப் பிறப்பு கருமங்கள்

**ஜெய வருஷம்**

ஜெய வருஷம் சித்திரைத் திங்கள் 01 ஆம் திகதி (14.04.2014) திங்கட்கிழமை காலை 06.11 மணிக்கு ஜெய வருஷம் பிறக்கின்றது.

**விஷு புண்ணிய காலம்**

13.04.2014 ஞாயிற்றுக்கிழமை முன்னிரவு 02.11 மணி முதல் பகல் 10.11 மணிவரை விஷு புண்ணிய காலம்.

**ஸ்நானம்**

இப்புண்ணியதினத்தில் யாவரும் சங்கல்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலமிலையும், காலில் விளாவிலையும் வைத்து ஸ்நானம் செய்க.

**ஆடை**

வெண்மை, சிவப்புநிறமுள்ள பட்டாடை, வெண்மை சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடை அணிய வேண்டும்.



**ஆபரணம்**

பவளம், முத்து அமைந்த ஆபரணம் அணிய வேண்டும்.

**உண்டி**

அறுசுவைஅமைந்த உண்டிகளுடன் தயிர்சோறு, உப்பு சேர்ந்திருக்க வேண்டும்.

**கைவிஷேசம்**

| | | |
|---|---|---|
| சித்திரை 01 | காலை | 06.15 மணி முதல் 07.31 மணி வரை |
| சித்திரை 01 | பகல் | 10.04 மணி முதல் 12.03 மணி வரை |
| சித்திரை 01 | பி.பகல் | 02.22 மணி முதல் 04.27 மணி வரை |
| சித்திரை 01 | இரவு | 06.21 மணி முதல் 7.21 மணி வரை |
| சித்திரை 01 | இரவு | 09.15 மணி முதல் 10.23 மணி வரை |

**தோஷமுள்ள நக்ஷத்திரங்கள்**

| | |
|---|---|
| ரோகிணி, உத்தரம் | 2ம், 3ம், 4ம் பாதம் |
| அத்தம், சித்திரை | 1ம், 2ம் பாதம் |
| திருவோணம், அவிட்டம் | 3ம், 4ம் பாதம் |
| சதயம், பூரட்டாதி | 1ம், 2ம் பாதம் |



ஆகிய நக்ஷத்திரத்தில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, தீபம், நிறைகுடம், சொர்ணம் போன்ற மங்கல பொருள்களில் தரிசித்து தாம்பூலம் தரித்து, குலதெய்வம், பெரியோர், குரு, பெற்றோர்களின் ஆசி பெற்று உரும்பிராய் சிவதர்மசாஸ்த்தாவின் பேரருளோடு இவ்வாண்டு காலம் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வத்தோடு வாழ்வாங்கு வாழ்வீர்களாக.

சபரிமலை குருசுவாமி, ஆதீனகர்த்தா,
ஐயப்பன் கோயில், உரும்பிராய்.
தொ.பே: 0213205050, 0778453766, 0212053084

ஆசி வழங்கும் குரு
பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ



(6053)

---

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

---

## வீடு விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு


தொ.இ. 0779763278/ 0712117168

தொடர்பு: ப.சிவநாதன்
காளிகோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(607..)

---

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 180/=

இப்போது **கோழிப் பாகங்களும்** (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.


(6123)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

---

## சங்கரத்தை கரந்தை குளவத்தை முருகமூர்த்தி கோயில்

### நாகலிங்கம் இரத்தினசிங்கம் மணி மண்டபம்



**திறப்பு விழா**

காலம் :- 12.04.2014
சனிக்கிழமை பி.ப. 04.30 மணிக்கு

பிரதம விருந்தினர் கௌரவ சி.வி.விக்னேஸ்வரன் (வட மாகாண முதலமைச்சர்) கலந்து சிறப்பிக்கின்றார்.

அன்புடையீர் !

சங்கரத்தை கரந்தை குளவத்தை முருகமூர்த்தி கோயில் வீதியில் எம்மால் அமைக்கப்பெற்ற நாகலிங்கம் இரத்தினசிங்கம் மணிமண்டபத் திறப்பு விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
திரு. திருமதி பாலகிருஸ்ணன் குடும்பம்

(C-7009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜய வருஷ வருஷப்பிறப்புக் கருமங்கள்

## ஜய வருஷ கைவிசேட தினங்கள்

### வாக்கிய பஞ்சாங்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| 14/04/2014 | திங்கள் | காலை | 6.11 மணி முதல் | 7.31 மணிவரை |
| 14/04/2014 | திங்கள் | முற்பகல் | 10.04 மணி முதல் | 12.03 மணிவரை |
| 14/04/2014 | திங்கள் | பிற்பகல் | 2.22 மணி முதல் | 4.27 மணி வரை |
| 14/04/2014 | திங்கள் | முன்னிரவு | 6.21 மணி முதல் | 7.21 மணிவரை |
| 14/04/2014 | திங்கள் | முன்னிரவு | 9.15 மணி முதல் | 10.23 மணிவரை |
| 16/04/2014 | புதன் | காலை | 6.04 மணிமுதல் | 7.41 மணிவரை |
| 16/04/2014 | புதன் | முற்பகல் | 7.49 மணி முதல் | 9.44 மணிவரை |
| 16/04/2014 | புதன் | முற்பகல் | 9.56 மணிமுதல் | 11.54 மணிவரை |
| 16/04/2014 | புதன் | பிற்பகல் | 2.14 மணி முதல் | 4.02 மணிவரை |
| 16/04/2014 | புதன் | முன்னிரவு | 6.13 மணி முதல் | 8.00 மணி வரை |

### திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| 14/04/2014 | திங்கள் | காலை 6.02 மணி முதல் | 7.30 மணிவரை |
| 14/04/2014 | திங்கள் | பகல் 10.00 மணி முதல் | 12.05 மணிரை |
| 16/.04/2014 | புதன் | காலை 6.01 மணி முதல் | 7.37 மணிவரை |

**வாக்கிய பஞ்சாங்கம்**

ஜய வருஷம் சித்திரை மாதம் முதலாம் திக்தி (14/4/2014) திங்கட்கிழமை முற்பகல் 6.11 மணிக்கு பூர்வபக்க சதுர்த்தசி திதியில் அத்த நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் வியாகாத நாமயோகத்தில் வணிசக் கரணத்தில் மேட லக்கினத்தில் மேட நவாம்சத்தில் சந்திரன் காலவோரையில் சந்திரன் சூக்குமவோரையில் சாத்வீக குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய காகம் நடைத் தொழிலும் சூக்கும பட்சி நடைத் தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய ஜய வருஷம் பிறக்கின்றது. முதல் நாள் இரவு 2.11 மணி தொடக்கம் அன்று முற்பகல் 10.11 மணி வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலமிலையும் காலில் விளாவிலை வைத்து ஸ்நானஞ் செய்து வெண்மை சிவப்பு நிறமுள்ள பட்டாடையாயினும் வெண்மை சிவப்புகரை அமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து பவளம் முத்து இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி விக்கினேஸ்வரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து சூரியனுக்கு பொங்கல் பூசைகள் செய்து குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உறவினர், நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை அமைந்த உண்டிகளுடன் தயிர்ச்சோறு, உப்பு என்பவை சேர்த்தருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடி தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப்பொருட்களைத் தரிசித்து புதிய வருஷப் பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரிய தவத்தால் பெற்ற இந்த மானிடப்பிறவியில் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்

**திருக்கணித பஞ்சாங்கம்**

ஜய வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி( 14/04/2014) திங்கட்கிழமை காலை 7.36 மணிக்கு ஜய என்னும் பெயருடைய புது வருஷம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் அத்தம் 2 ஆம் பாதம், திதி பூர்வபட்ச சதுர்த்தசி, சித்த யோகம். இது 60 வருஷ சுற்றுவட்டத்தில் 28 ஆவது வருஷமாகும். அன்று திங்கட்கிழமை அதிகாலை 3.36 மணி முதல் முற்பகல் 11.36 மணி வரை மேட சங்கிரமண புண்ணிய காலம் ஆகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் மேடம் ஆகும்.

இப்புண்ணிய காலத்தில் சகலரும் அதிகாலை நித்திரை விட்டெழுந்து சங்கற்பபூர்வமாக மருத்துநீர் தேய்த்து, தலையில் விளா இலையும் காலில் கடம்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெண்ணிறப் பட்டாயினும் அல்லது வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து முத்து சேர்த்திழைக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து கண்ணாடி தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து விநாயகர் முதலிய் இஷ்டகுல தெய்வங்களைத் தரிசித்து தத்தம் இல்லங்களில் புது வருஷ சூரியனுக்குபொங்கல், பூசைவழிபாடுகள்செய்து குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி ஆசி பெற்றுஇயன்ற தானங்கள் வழங்கி பிதிர் விரதானுசாரிகள் சிராார்த்தம், தர்ப்பணம்என்பனசெய்து விருந்தினர்கள், நண்பர்களை வரவேற்று சுற்றத்தினருடனிருந்து பாற்பாயாசம், தயிரன்னம், நெல்லிக்காய்த்துவையல் முதலியவற் றுடன் அறுசு வைப் பதார்த்தங்களையும்போஜனம் செய்து தாம்பூலம் அருந்தி, சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து புதுப் பஞ்சாங்க பலன்களைக் கேட்டு புது வருடத்தில்ஆற்றக்கவுயநற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வீர்களாக.

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

ரோகினி, உத்தரம் 2, 3,4 ஆம் கால்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 3,4 ஆம் கால்கள், சதயம்,பூரட்டாதி1,2,3 ஆம் கால்கள்.

இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து சங்கிரம தோசத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

**மருத்துநீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாது மாதுளம்பூ, தாமரைப்பு, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம்,கோசலம்,கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றை சுத்த ஜலத்திலிட்டுக் காய் ச்சிக்கொள்க. பூவகை கிடை க்காவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

# புத்தாண்டு தினத்தை துன்பப்படும் தினமாக மாற்றிவிடாதீர்கள்

## பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்து

(சாவகச்சேரி)

புத்தாண்டுக் காலத்தில் மதுபோதையில் வாகனங்களை செலுத்தி விபத்துக்களை ஏற்படுத்த வேண்டாம். கடந்த புதுவருடத்தின்போது சாவகச்சேரி பிரதேசத்தில் 84 வீதி விபத்துக்கள் ஏற்பட்டன. இதில் 15 விபத்துக்கள் பாரதூரமானவை என ஆலோசனைக்குழுத் தலைவரும் சாவகச்சேரி .வைத்திய அத்தியட்சகருமான ந.குகதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுவருட காலத்தில் வீதி விபத்துக்கள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவு படுத்தும் நோக்கில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பிரதேச வாழ் மக்கள் மற்றும் ஊடகவியலாளருடனான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ. எம்.எஸ்.தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு அவர் வலியுறுத்தினார். மேலும் அங்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு,

இதில் பண்டிகைக் காலங்களில் விளையாட்டுக்களில் ஈடுபடும் இளைஞர்கள் தமது முரண்பாடுகளை சகித்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் கடந்த வருடம் விளையாட்டில் ஏற்பட்ட முரண்பாட்டில் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் இக்காலத்தில் வீதி நெரிசல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே வீதிகளை கடக்க முற்படும்போது மஞ்சள் கோட்டுக் கடவையை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

மோட்டார் சைக்கிளில் செல்லும் பயணிகள் குறைந்தது இருவர் மாத்திரம் செல்லுதல் வேண்டும். அத்துடன் தலைக்கவசம் அணிந்து செல்லும்போது வீதிவிபத்துக்களின் போது ஏற்படும் உயிரிழப்புக்களை கணிசமாகக் குறைக்கலாம்.

ஆலயங்களிலும் வீடுகளிலும் தமது எல்லைக்குள் மட்டும் கேட்கக் கூடியதாக ஒலிபெருக்கிகளில் பாட்டுக்களைப் போடவேண்டும்.மேலும் வெடிகொளுத்தி மகிழும்போது யாருக்கும் இடையூறு ஏற்படுத் தக்கூடாது. இதனால் அமைதியான ஒரு புதுவருடத்தை இந்த வருடம் நாம் கொண்டாட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக 35-40 வயதுக்குட்பட்ட குடிப்பழக்கம் இல்லாதவர்களுக்கு புகையிரத சேவையில் சேவைக்கு அமர்த்துவதாகவும் இதற்கமைய மாதமொன்றுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா என்ற வீதத்தில் சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் மேற்படி கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (29)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 90 | 120 | 80 | 100 |
| தக்காளி | 40 | 50 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 45 | 40 |
| கோவா | 30 | 20 | 40 | 40 |
| கரட் | 90 | 100 | 80 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 40 | 90 | 60 | 60 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 150 | – | 200 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 50 | 70 |
| கீரை – 1 பிடி | 10 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 70 | 100 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 | 80 |

# இராசி பலன்

12.04.2014
(பங்குனி 29, சனிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துவாதசி முற்பகல் 11.55 மணிவரை
பூரம் முன்னிரவு 8.31 மணிவரை
இராகுகாலம் 9.06-10.36 மணிவரை
சுபநேரம் 3.06-4.36 மணிவரை
சனிப் பிரதோச விரதம்

**மேடம்** சுப முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், எந்தக் காரியத்தையும் எளிதில் முடிக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**கடகம்** தொலைதூரத்திலிருந்து சுகப செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

**சிங்கம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், கற்பனை மிகுதியான நாள், சயன சுகமுண்டு.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும், இடமாற்றம்,ஊர்மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது.

**துலாம்** உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏற்படலாம், ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** தூர தேச செய்திகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உங்களின் கருத்துகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், போசன சுகமுண்டு.

**தனுசு** தொழில் நலன் கருதி முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், வீண் பழிகள் அகல புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், எதிர்பாராத பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்,தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கும்பம்** தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் ஏற்படலாம், உறவினர்கள் வருகையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**மீனம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மாற்று மருத்துவத்தால் ஆரோக்கியம் சீராகும், சுவாரஸ்யமான நாள், செய் தொழில் மேன்மையுண்டு.

**வளவன்**

# முன்பள்ளி விளையாட்டுவிழா

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் முன்பள்ளி வளாகத்தில் தலைவர் அருட்திரு என்.ரி. ஜெயநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் பொ. வியாகேசு கலந்து கொள் வார்.

பரிசில்களை பருத்தித்துறை பிரதேச செயலக ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சுமதி வியாகேசு வழங்குவார். (52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி உத்தியோகத்தரின் வீட்டிற்கு கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி உத்தியோகத்தரின் வீட்டிற்கு இனந்தெரியாதோரால் கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் யாழ் உடுவில் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றதாக உரிமையாளரினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.





இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

உடுவில் பகுதியில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தரின் வீட்டில் கடந்த புதன் கிழமை இரவு 9 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கல்வீச்சு தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இக் கல்வீச்சுத் தாக்குதலில் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் இரண்டு உடைந்துள்ளதாக நேற்றைய தினம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் இது தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-23)




# இரத்ததான நிகழ்வு

(மானிப்பாய்)

யாழ்.நகர் மைய றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளதாக யாழ்.றோட்டறக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந் நிகழ்வானது எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் நகர் மைய றோட்டறக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (2-23)

# வடமாகாணசபை உறுப்பினர்கள் தனித்தனியாக பொலிஸ் பாதுகாப்பு கோரவேண்டும்-பி.விமலசேன

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களிற்கு பொலிஸ் பாதுகாப்பு வேண்டுமெனில் உறுப்பினர்கள் அனைவரும் தனித்தனியாக பொலிஸ் பாதுகாப்பு கோரவேண்டுமென யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும் அவர்களிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம் கோரிக்கை விடுத்திருந்தமை தொடர்பாக ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அச்சுறுத்தல் உள்ள வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நாம் பொலிஸ் பாதுகாப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்.

பொலிஸ் பாதுகாப்பு வழங்கக்கோரி சில மாகாண சபை உறுப்பினர்கள் தனித்தனியாக கோரியுள்ளதோடு சிலர் அவைத் தலைவரூடாகவும் கோரியுள்ளனர்.

நாம் எம்மிடம் பொலிஸ் பாதுகாப்பு வழங்கக் கோரி தனித்தனியாக விண்ணப்பம் செய்த உறுப்பினர்களிற்கே முதலில் பாதுகாப்பு வழங்கவுள்ளோம்.

ஏனையோருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்யவுள்ளோம்.

உறுப்பினர்கள் தமக்கு பாதுகாப்பு தேவையென கருதினால் அவ் உறுப்பினர்கள் அனைவரும் தனித்தனியாக எம்மிடம் பொலிஸ் பாதுகாப்பு கோரவேண்டும்.

அவ்வாறு கோரினால் மாகாணசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என்றார் அத்தியட்சகர். (2-4)

# குற்றம் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவர்

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

குற்றம் புரிந்தவர்கள் யாராக எந்தப் பதவியில் இருந்தாலும் பொலிஸார் கைது செய்வதற்கு தயங்கமாட்டார்கள் என யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

குற்றத்தில் ஈடுபடுவோரை கைது செய்தற்கு பொலிஸார் ஒருபோதும் தயங்கியதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒருவர் குற்றம் புரிந்து அவருக்கெதிராக இன்னொருவர் முறைப்பாடு பதிவு செய்திருந்தார். குற்றவாளி உண்மையானவரா என கண்டறிந்தால் பொலிஸார் அவரை கைது செய்வார்கள்.

இங்கு குற்றம் புரிந்தவர் அமைச்சர் என்றும் கூட பார்க்கப்படமாட்டார். குற்றவாளி யாகவே நோக்கப்படுவார் என்றார் அவர்.(2-4)

# ஒப்பந்த நிறுவனங்களுக்கு எதிராக 38 முறைப்பாடுகள்

## பிரதித் தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

மிகப்பெரிய ஒப்பந்த நிறுவனங்களுக்கு எதிராக 38 முறைப்பாடுகள் வடமாகாண தொழிற்றுறை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கட்டட வேலைகளை மேற்கொள்ளும் மிகப்பெரிய ஒப்பந்த நிறுவனங்கள் உப ஒப்பந்த நிறுவனங்களிடம் தமது வேலைகளை ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வேலைகள் மேற்கொள்வதற்கான எழுத்து மூல ஆவணங்கள் இன்றி வேலைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அதற்குரிய பணத்தினை ஒப்பந்த நிறுவனங்கள் உப ஒப்பந்த நிறுவனங்களுக்கு செலுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டியே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு, 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் 12 ஒப்பந்த நிறுவனங்களுக்கு எதிராகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 18 ஒப்பந்த நிறுவனங்களுக்கு எதிராகவும், வவுனியா மாவட்டத்தில் 8 ஒப்பந்த நிறுவனங்களுக்கு எதிராகவும் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு எழுத்து மூல ஆவணங்கள் இன்றி ஒப்பந்தங்களை கையளித்த ஒப்பந்த நிறுவனங்களுக்கு எதிராக தொழில் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.


எனவே, இவ்வாறு மிகப்பெரிய ஒப்பந்த நிறுவனங்களிடம், ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் உப ஒப்பந்த நிறுவனங்கள் எழுத்து மூல ஆவணங்கள் இன்றி எதிர் காலத்தில் ஒப்பந்தத்தினை மேற்கொள்ள வேண்டாமென்றும், ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் போது அதிக கவனம் செலுத்துமாறும் வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் உப ஒப்பந்தகாரர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-23)

# கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாமிடம்

(கொடிகாமம்)

அகில இலங்கை ரீதியிலும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யா/ எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் 9 ஆம் தரத்தில் கல்வி பயிலும் பிரியங்கா கனகசபை என்ற மாணவி வடமாகாணத்திலும் அகில இலங்கை ரீதியிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி இப் போட்டியில் வெற்றியீட்டிய இம் மாணவிக்கு கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடமாகாண ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் வழங்கியுள்ளார். (2-272)



தென்மராட்சி வறணி கரம்பைக்குறிச்சி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதன் போது முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை அதிபர் எஸ். கந்தசுவாமி உரையாற்றுவதனையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- கொடிகாமம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மனித புதைகுழி விடயத்தை அரசாங்கம் மூடி மறைக்க கூடாது

## ஐ.ம.சு.முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

வெளிநாடுகளில் இயங்கிவரும் பதினாறு தமிழர் அமைப்புக்கள் தடைசெய்யப்பட்டது அரசாங்கத்தின் பேரலி சமாதான முத்திரையை கிளித்தெறிவதாக உள்ளது எனவும் திருக்கேதீஸ்வரப் புதைகுழியை மயானமெனக் கூறி உண்மைகளை மூடிமறைக்க அரசாங்கம் முற்படக்கூடாதுஎனவும் வடகிழக்கில் இராணுவமயமாக்கல் தடுத்து நிறுத்தப் படவேண்டுமெனவும். அவுஸ்திரேலியாவுக்கு படகில் சென்றவர்கள் மீது மனிஸ் அஸ்ன்ட் முகாமில் நடத்தப்படும் காட்டுமிராண்டித்தனத்தையும் கண்டிப்பதாக ஜன நாயக மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் பாஸ்கரா குறிப்பிட்டார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பு கடந்த புதன்கிழமை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், வெளிநாடுகளில் இயங்கிவரும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தடைசெய்யப்பட்டதானது முள்ளிவாய்க்கால் இனபடுகொலையை உலகநாடுகளுக்கு தெரிவித்து நியாயத் தன்மையை பெற்றுக்கொள்வதற்கான கைங்காரியங்களில் ஈடுபட்டதும் ஜெனீவாவில் இலங்கைக்கெதிராக ஐக்கியநாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு பழிவாங்கும் செயற்பாடாகவே இத்தடை காணக்கூடியதாக உள்ளது.

பாதுகாப்பு அமைச்சு செயலாளர் அண்மையில் கூட புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் வந்து முதலீடு மேற்கொள்ள வேண்டும் என கூறியிருந்தது முக்கியமான ஒருவிடயமாகும். இவ்வேளையில் அரசாங்கத்தின் இத் தடைச் செயற்பாடு அரசாங்கத்தின் சமாதானத்தின் மீதான கரிசனையின் மையை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

தொடர்ந்து திருக்கேதீஸ்வரத்தில் மயானம் இருந்ததாகதொல்பொருள் ஆராய்ச்சி திணைக்கள அதிகாரியொருவர் கூறியுள்ளார். அங்கு மயானம் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை. மயானத்தில் உடல் தகனம் செய்யப்படுமே தவிர புதைக்கப்படமாட்டாது.

இப்பகுதிபெரும்பாலும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளது. அதற்கு முன்னர் அங்கு இருந்தமக்கள், திருக்கேதீஸ்வர கோவில் சமூகத்தினர் அப்பகுதியில் மயானம் இருக்கவில்லை யெனக் கூறியுள்ளனர்.

கிருசாந்தி கொலைவழக்கின் மூலம் செம்மணிபுதைகுழிவிவகாரம் வெளி வந்தது. அக்கொலைவழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளியான ராஜபக்ஷ தான் உண்மைகளை கூறப் போவதாக அப்போது கூறியிருந்தார். தற்போது அக்குற்றவாளி எங்கேயென தெரியாது.

முன்னர் செம்மணிபுதைகுழியையும் அரசாங்கம் மறுத்தது. பின் உண்மை வெளிவந்தது. இந்நிலையில் திருக்கேதீஸ்வர புதைகுழிவிவகாரத்தையும் அரசாங்கம் மறுக்கின்றது என்றார்.

விதுஷிகா,அவரின் தாயின் கைதைத் தொடர்ந்து கொத்துக் கொத்தாக குடும்பம் குடும்பமாகக் கைதுசெய்வதும் சகல செயற்பாட்டிலும் இராணுவ மயமாக்கல் ஈடுபடுவதும் வடகிழக்கில் உச்ச இராணுவ நிலை ஏற்படுவது அரசாங்கத்தின் சமாதானத்தின் மீது உள்ள நாட்டமின்மையை மீண்டும் பறைசாற்றிக் காட்டுகின்றது. இந்தநிலை உடனடியாகநிறுத்தப்படவேண்டும். இல்லையேல் பூகோள வரைபடத்தின் இலங்கையின் அமைவிடம் என்பது மாற்றியமைக் கப்படவேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாதொன்றாக போய்விடும் என்று தெரிவித்தார். (2)

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532

# உலகை வலம் வந்த விமானி கைது

(கொழும்பு)

தனது சொந்த விமானம் மூலம் உலகை வலம் வரும், சுவிர்சர்லாந்தின் விமானி ஒருவர் இந்தோனேஷிய விமானப படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தோனேஷிய விமான எல்லையிலிருந்து இலங்கை விமான எல்லைக்குள் சட்டவிரோதமான முறையில் உள்நுழைய முயற்சித்த குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹய்ன்ஸ் பியேர் என்ற 65 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கையிலிருந்து சிங்கப்பூர் நோக்கி பயணிக்கும்போது அநாவசியமாக தமது விமான எல்லைக்குள் பயணித்துள்ளதாக இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

ஹய்ன்ஸ் பியேர் இரண்டு வருடத்துக்கும் அதிக காலப்பகுதியில் 30 நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இவர் இலங்கைக்கான விஜயத்தின் போது தலதா மாளிகைக்கு விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

# பொதுபலசேனா செயற்பாடுகள் தொடர்பில் அரசு மௌனம்

## கபீர் ஹஸீம் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் செயற்பாடுகள் சம்பந்தமாக அரசாங்கம் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஸீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் அண்மையில் நடந்த சம்பவம் தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது பல சேனா அமைப்பு நடந்து கொண்ட அராஜகமான நடவடிக்கை தொடர்பில் அரசாங்கம் இதுவரை வாய்திறக்கவில்லை. ஜாதிக பல சேனா அமைப்பு நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிற்குள் புகுந்த பொதுபல சேனா அமைப்பினர் அதனை குழப்பினர். இந்த சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்கவேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் இரத்தம் சிந்தும் சூழ்நிலைகளை உருவாக்கும். பயங்கரவாதத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட நாட்டிற்குள் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் வளர்ந்து வரும் நிலையில், மீண்டும் இனவாதத்திற்கு பாதை அமைக்கும் இப்படியான சம்பவங்களை அனுமதிக்க முடியாது.

பொது பல சேனா இதற்கு முன்னர் பல முறை இவ்வாறு நடந்து கொண்டது. மேற்படி சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் செயற்படும் விதத்தை வன்மையாக கண்டிக்கிறோம். பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்க போவதாக முஸ்லிம் அமைச்சர்கள் கூறுகின்றனர். என்றோ ஒரு நாள் பாராளுமன்றத்திற்கு வரும் இந்த அமைச்சர்கள், புதிதாக பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்க வேண்டியதில்லை.

முஸ்லிம் அமைச்சர்கள் அரசாங்கத்தின் சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொள்கின்றனரே தவிர இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண முயற்சிப்பதில்லை.

தீர்வை காண முயற்சிக்காத முஸ்லிம் அமைச்சர்கள், பிரச்சினையை வைத்து அரசியல் செய்ய முயன்று வருகின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (2)

# பாராளுமன்ற அமர்வுகள் மே முதல் ஒளிபரப்பாகும்

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகள். மே மாதம் முதல் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி விவாதங்கள் தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன. இந்த விவாதத்தின் போதான நாடாளுமன்ற உறுப்பினர்களின் மரியாதையற்ற வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் நடத்தைகள் காரணமாக நேரடி ஒளிபரப்பு இடைநிறுத்தப்பட்டது.

இருப்பினும், தற்போது இவ்வாறான தவறான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் தவறான நடத்தைகள் இடம்பெறுமாயின் சபாநாயகர், தனது மேசையிலுள்ள பொத்தானை அழுத்தினால் அந்த நடத்தையின் நேரடி ஒளிபரப்பு தணிக்கை செய்யப்படும்.

இது தொடர்பாக சபாநாயகர் கூறுகையில், என்னிடம் விசேட பொத்தான் உள்ளது. எவரேனும் தேவையற்றதைப் பேசினால் நான் அந்த பொத்தானை அழுத்தி ஒளிபரப்பில் தணிக்கை ஏற்படுத்துவேன் என்றார். (2)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 57 . செவ் 7 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / சாரதி, Services Station<br>தொ.இ: B/1313 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 6 செவ் 8 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA, MCA / தனியார் ஆசிரியர்எதிர்பார்ப்பு: சைவ போசனம்<br>தொ.இ: G/1873 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 10 ¼ சூரி செவ் 3 ல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L / தனியார் நிறுவன முகாமையாளர்<br>தொ.இ: B/1318 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 36 . செவ் 8 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BE / பொறியியலாளர் (டுபாய்)எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1874 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 18 ¾ செவ் 8 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: CIMA / கணக்காளர்<br>தொ.இ: B/1320 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 22 ¾ செவ் 8 ல்<br>உயரம்: 155 cm<br>தகைமை/தொழில்: Dip. in Education / ஆசிரியர்<br>தொ.இ: G/1875 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 83 ½<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: NCT, Civil Engineering / தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/1322 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1கி.பா: 63 ¾<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1876 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணையில் பங்குபெறும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## வடக்குமாகாணசபை உறுப்பினர் ரவிகரன்

(குருமன்காடு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்படுகிற சர்வதேச விசாரணையில் மக்கள் சுதந்திரமான பங்களிப்பை வழங்குவதை உறுதிப்படுத்த தகுந்த பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குலகால் ஜெனீவாவில் நிறைவேற்றபட்ட தீர்மானம் எம் மக்களின் தேவைகளை சரியாக பிரதிபலிக்கவில்லை. தமிழர் என்கிற இன அடையாளத்தின் காரணமாகவே இங்கே காலங்காலமாக எம் மக்கள் அழிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை அத்தீர்மானம் அடையாள படுத்தவில்லை. முள்ளிவாய்க்கால் என்கிற பேரழிவு, மிகப் பெரும் சாட்சியமாக இருந்தும் , சிறுபான்மை மதங்கள் மீதான வன்முறை என்றளவில் மட்டுமே அத்தீர்மானம் சுருக்கமாக அடையாளப்படுத்தி இருக்கிறது.

நடைபெறப்போகும் சர்வதேச விசாரணையில் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் கருத்தில் கொள்ளப்படுமா என்பதும் கேள்விக்குறியுடன் நிற்கிறது.

இந்நிலையில் இத்தீர்மானத்தை எமக்கான தீர்வுபாதையாக நாம் நோக்க இயலாது. இது எம் மீது திணிக்கப்பட்ட மற்றொரு போராட்ட பாதையாகும். இத்தீர்மான விடயங்களை எமக்கான போராட்டக்களமாக மாற்றுவதே எம் முன்னுள்ள தெரிவாக மாறியிருக்கிறது.

அதேவேளை எம் மக்கள் பல சவால்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். குறித்த சர்வதேச விசாரணையில் தாயக மக்கள் சுதந்திரமாக பங்களிக்க முன்வரும் தயார் நிலையை தகர்க்கும் வகையில் பல கைதுகள், அச்சுறுத்தல்கள் இங்கு ஆரம்பித்து விட்டன.

புலத்து மக்களுடன் எம் மக்கள் தொடர்பு கொள்ளும் வழிகளை முடக்கும் வகையில் அவர்கள் மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

சம நேரத்தில் தாயகத்தில் நில அபகரிப்பும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பும் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணை வெற்றிகரமாக இடம்பெறுவதற்கு பங்குபெறும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொடந்து இடம்பெறும் அடக்குமுறைகளையும் கட்டுப்படுத்தவேண்டும்.

இதற்கு தகுந்த பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த சர்வதேசம் முன்வர வேண்டும். இந்தப் பொறிமுறையின் வெற்றிகரமான செயற்பாடே, சர்வதேச விசாரணை நியாயமான முறையில் இடம்பெற வழிவகுக்கும். என்றார். (2-250)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி, முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவமும் பிற்பகல் 2 மணிக்கு இரத அவரோகணமும் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்று, மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும். (2)



யாழ்.எயிட் நிறுவனத்தால் கனடாவில் வசிக்கும் ஜெரமிகாவின் முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதம கச்சேரி செயலக மனித வள மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் லிஸ்ரன் ரஜனி காந்தின் அனுசரனையில் கிளி/முகமாலை றோ.க.த.க பாடசாலையில்கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான கற்றல் உபகரணாங்கள் வழங்கப்பட்டபோது. (படம் :- மானிப்பாய் செய்தியாளர்)

# பாராளுமன்ற பகிஷ்கரிப்பு குறித்து கலந்துரையாடல்

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

பொதுபல சேனா அமைப்பின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காததை கண்டித்து முஸ்லிம் எம்.பிக்கள், நாடாளுமன்ற கூட்டங்களை பகிஷ்கரிப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளனர்.

நாடாளுமன்ற கூட்டங்களை பகிஷ்கரிப்பது தொடர்பில் கலந்துரையாடி வருவதாகவும் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் அமைச்சர் றிசாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மத பிரதிநிதிகள் மற்றும் பௌத்த தேரர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விசாரணைகளுக்கு வருமாறு பொலிஸார் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

அதேவேளை அடிப்படைவாத அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறியுள்ளதால், நாடாளுமன்றத்தை பகிஷ்கரிப்பதன் மூலம் வலுவான செய்தியை வழங்க முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி கூறியுள்ளார். (2)

# பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காவிடின் காலவரையறையின்றி பணிப்புறக்கணிப்பு

## அரச மருத்துவர் பேரவை எச்சரிக்கை

(கொழும்பு)

காலவரையறையின்றி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென கோரி இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர். மருத்துவர்களின் சேவை தொடர்பிலான முன்மொழிவுகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட போதிலும் அவை அமுல்படுத்தப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

இடமாற்றம், சம்பள உயர்வு, விடுமுறை போன்ற பல்வேறு விடயங்களுக்கு இந்த முன்மொழிவு அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் காலவரையறையின்றி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட நேரிடும் என அரசாங்க மருத்துவர் பேரவை அறிவித்துள்ளது. (2)

# விடுதலைப்புலி உறுப்பினர்களை கண்டறியும் விசாரணைக்குழுவை அமைக்க வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

அரசாங்கம் காலம் தாழ்த்தியமையினாலேயே பிரிவினைவாதம் மீள உருவாக்கப்பட்டுள்ளது. நாடு திரும்பியவுடன் கூட்டமைப்பின் உறுப்பினர்களான சம்பந்தன், சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் அனந்தி சசிதரன் ஆகிய நால்வரையும் கைது செய்வதுடன் விடுதலைப் புலி உறுப்பினர்களை கண்டறியும் விசாரணைக் குழுவொன்றினை உடனடியாக ஸ்தாபிக்க வேண்டும் என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் விடுதலைப்புலி உறுப்பினர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்க வேண்டும். போராட்டத்திற்கு நாமும் தயார் எனவும் தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியினால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவிக்கையில்,

விடுதலைப்புலி தீவிரவாதிகள் அழிக்கப்பட்டவுடனேயே பிரிவினைவாத சக்திகளையும் அழித்திருக்க வேண்டும். அன்று அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பை முற்றாக தடை செய்திருந்தால் இன்று இலங்கையில் எவரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டிருக்காது. விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்திய பின்னர் அரசாங்கம் மனிதாபிமானமாக நடந்து கொண்டது.

கைது செய்யப்பட்ட 11 ஆயிரத்திற்கும் அதிகமான விடுதலைப்புலிகளை புனர்வாழ்வளித்து சமூகத்தில் சேர்த்துக் கொண்டோம். ஆனால் அவர்களை மீண்டும் தூண்டி விட்டு நாட்டில் ஆயுத போராட்டமொன்றினை உருவாக்கும் வகையில் பிரிவினைவாத தலைமைச் சக்திகள் முயற்சிக்கின்றன.

குறிப்பாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அன்று விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டவர். ஆனால் இன்று அரசியல் போர்வையில் நாட்டிற்கு எதிராக செயற்பட்டு வருகின்றார்.

அதேபோல் சுமந்திரன் ஒரு கொடிய விஷப்பாம்பு. சர்வதேசத்தினை இலங்கைக்கு எதிராக திருப்பி போராட்டத்தினை தூண்டுவதில் சுமந்திரனுக்கு முழுப்பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. சுரேஸ் பிரமேச் சந்திரன், அனந்தி சசிதரன் ஆகியோரும் அவ்வரிசையில் உள்ளனர்.

எனவே நாட்டிற்கு எதிராக சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சம்பந்தன், சுமந்திரன் , சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய மூவரையும் நாடு திரும்பிய உடன் உடனடியாக கைது செய்ய வேண்டும்.

அதேபோல் இன்று இலங்கைக்கு வெளியில் இருந்து கொண்டு நாட்டை நாசமாக்கும் வகையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர். இவர்களின் செயற்பாட்டை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டுமாயின் இலங்கையில் சுயாதீன விசாரணைக் குழுவொன்றினை உருவாக்கி இவர்கள் தொடர்பிலான முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் விடுதலைப்புலிகளை உருவாக்குவதில் முக்கிய பங்கினை வி. உருத்திரகுமார், நெடியவன், விநாயகம், சுரேந்திரன் மற்றும் அடேல் பாலசிங்கம் போன்றோரும் இமானுவேல் ஆகிய மத குருமாரும் செயற்பட்டு வருகின்றனர்.

சர்வதேச அமைப்புக்களின் பணத்திற்காக இலங்கைக்குள் போராட்டங்களை உருவாக்கும் செயற்பாட்டில் இவர்கள் இறங்கியுள்ளனர்.

ஜெனீவா தீர்மானம் நிறைவேறிய பின்னர் இலங்கையில் மீண்டும் விடுதலைப் புலிகளின் கொள்கை உறுதியாக்கப்பட்டுள்ளது. எனவே இதனை உடனடியாக தடுக்க வேண்டும் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்-I

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 51-II



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

நவீன சேதன விவசாயம், அதன் தத்துவங்கள், தேவைப்பாடுகள் பற்றி பார்ப்போம். அந்த வகையில் சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் (சொண்ட் நிறுவனத்தின்) முன்மாதிரிகை பண்ணை ஒன்று கோப்பாய் நீர்வேலி பகுதியில் நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டுள்ளது. அது பற்றிய விளக்கங்களை காண்போம். சேதன விவசாய சான்றிதழ் பற்றிய முக்கியத்துவம், அதனை எப்படி பெற்றுக்கொள்வது என்பவை பற்றி விரிவாக பின்னர் வரும் அத்தியாயங்களில் பார்ப்போம். எனினும் நாம் இதுவரை அறிந்தபடி அது மிகவும் அவசியமானது என்பதை அனைவரும் உணர்ந்துகொண்டுள்ளோம். ஆனால் அது சாதாரண விவசாயினால் ஏற்றுக்கொள்ள முடியாத அளவு பொருளாதார சுமையாக உள்ளதால் சொண்ட் நிறுவனத்தின் அயராத முயற்சியினால் கோப்பாய் பகுதி விவசாயிகளுக்கு சேதன விவசாய சானிறிதழ் பெற்றுத் தரும் வழிமுறையை மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் மாதிரிப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது இந்தப் பகுதி விவசாயிகள் சாதாரணமாக பின்பற்றும் முறை. அதனோடு கூட சில வித்தியாசமான முறைகளாக வாழை கால்வாய், வாழைக்குழி, வாழை வட்டம் ஆகியவற்றை கொண்டுள்ளது. அது மட்டுமல்லாமல் இந்தக் காணியின் சுற்றுப்புறம் மேட்டுப்பகுதியாகவும் கற்பூமியாகவும் காணப்பட்டது. அதையும் முற்றாகப் பயன்படுத்தும் விதத்தில் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியையும் வீதி முறையில் பயிரிடப்பட்ட கிளிரிசிடியா உயிர்வேலி எல்லைப்படுத்துகிறது.

**வாழைக்கால் வாய**

இது 3 அடி ஆழம் கொண்ட 1,1/2 அடி அகலம் கொண்ட நீளமான கால்வாய்கள் இரண்டு 6 அடி இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே ஒவ்வொரு மீற்றர் இடைவெளியில் கால்வாயின் அருகாமையில் ஒவ்வொரு வாழைமரம் நடப்பட்டுள்ளது. வாழையின் இடைவெளியில் பூசணி வகைகளும் ஓரங்களில் அவரை இன வகைகளும் ஊடுபயிர்களாக பயிரிடப்படுள்ளன.

**வாழைக குழி**

இது 3 அடி ஆழம் கொண்ட 2,1/2 அகலம் உடைய ஒவ்வொரு மீற்றர் இடைவெளியில் அமைக்கப்பட்ட குழிகளுக்கு அருகாமையில் ஒவ்வொரு வாழை மரம் நடப்பட்டுள்ளது. அத்தோடு வாழையின் இடையில் பசளி வகைகள் , பலவகையான கீரைகள், சோளம், உருளைக்கிழங்கு என்பனவும் பயிரிடப்பட்டுள்ளன.

**வாழை வட்டம்**

இது 3 அடி ஆழம் கொண்ட குழி சாய்வான முறையில் அகலம் 6 அடி கொண்ட வகையில் உருவாக்கப்பட்டு அதன் 3 அடி அகலம் உடைய பருதியில் இரு புறமும் தென்னம் உரிமட்டையால் வரியப்பட்டு 4 வாழைகள் நாட்டப்பட்டுள்ளன. அதனோடு குழிக்கு வெளிப்புறத்தில் பழவர்க்கங்களும் ஏனைய மரங்களும் நாட்டப்பட்டுள்ளன. வாழைகளுக்கு இடையில் வெள்ளைப் பூண்டு நாட்டப்பட்டுள்ளது. (அகத்தி, மாதுளை, கறிவேப்பிலை,விலும்பிலி, ஆனைக்கொய்யா, கொய்யா, யம்பு, கோப்பி, அன்னாசி) கரை யோர மட்ட மேட்டு நிலங்களில் வத்தாளை,சலாது, கத்தரி,தக்காளி, வெண்டி, மிளகாய்,பாகல் புடோல், சிறகவரை என்பனவும் இளைப்பாறும் பகுதியில் பசன் பழம், பசளி,புதினா என்பனவும் பயிரிடப்பட்டுள்ளன.

**சிறப்பியல்புகள**

♦ இளைப்பாறும் பகுதியில் மண்புழு திரவம், திரவ பசளை, ஜீவமிர்தம், கூட்டெரு கூடை, நீர் சேமிப்பு குழி என்பனவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

♦ வாழைத் தோட்டத்தில் கிடைக்கக்கூடிய சகல கழிவுகளையும் (வாழைச் சருகுகள், இதர களைகள்) குழிகளை நிரப்பும் பசும்தாட் பசளையாக பயன்படுத்தலாம். இதனால் தோட்டம் சுத்தமாக இருக்கும். இலகு பசளைகளையும் பெற முடியும்.

♦ நீர்ப்பாசனம் குழிகளுக்குள்ளேயே விடப்படுகின்றமையினால் வாழைகளுக்கு நேரடியாக நீர் கிடைக்காததால் பரம்பலாக வெளியில் தாக்கும் நோயில் இருந்து விடுதலை கிடைக்கும்.

♦ நீர்ப்பாசன இடைவேளை 7 நாட்கள் ஆக்கப்படுகின்றதால் நீர்காப்பு மற்றும் மண்காப்பு என்பன பேணப்படுகின்றன.

♦ வீதி முறையில் பயிரிடப்பட்ட கிளிசிரீயா உயிர் வேலி இயற்கை பசளையை ( நைதரசனை) வழங்குகின்றது.

♦ கலப்பு பயிர் செய்வதனால் வருமானம் நிச்சயிக்கப்படுகின்றது. உயிர் பல்வகைமையும் சூழற் சமநிலையும் பசுமையும் இயன்றளவு பேணப்படுகின்றது.

இத்தகைய பயிர்ச் செய்கைமுறை சூழல் பாதுகாப்பு, இயற்கைவளங்களைஉச்சமாகப் பயன்படுத்துதல், சக்தியை உச்சமாக பயன்படுத்துதல், பொருளாதார மிச்சம், வருமான அதிகரிப்பு,மனித ஆரோக்கியத்திற்கு சாதகமான உணவுற்பத்தி போன்ற பல்வகை அம்சங்களை கொண டது.

மாறிவரும் உலக சூழ்நிலைக்கு ஏற்ப தொற்றுநோய்கள் மனித குலத்திற்கான பல்வகை நோய்கள் காலநிலை மாற்றம் என்பவற்றிற்கு தீர்வாகவே இப்பயிர் செய்கைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.வடபகுதி விவசாயிகள் இத்தகைய பயிர்ச்செய்கை முறையை பின்பற்றுகின்ற போது மேற்குறிப்பிட்ட பல்வகை நன்மைகளையும் அவர்கள் பெற்றுக் கொள்ளக கூடியதாக இருக்கும். ஆண்டாண்டு காலமாக நாம் பயன்படுத்திவந்த பயீர்செய்கை முறையை விட்டு புதிய முறைக்கு மாறுவதென்பது இலேசான காரியம் அல்ல. ஆயினும் விவசாய பெருமக்கள் பரீட்சார்த்தமாக ஒருபரப்பு நிலத்திலாவது இத்தகைய பயிர் செய்கை முறையை பயன்படுத்தி அவற்றிலுள்ள நடைமுறை பிரச்சினைகளை அவதானித்து தீர்வுகண்டு படிப்படியாக இந்நிலைக்கு மாற வேண்டும். அரசின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தற்போது பல கிருமிநாசினிகள் தடை செய்யப்பட்டு வருகின்றன. ஒரு கால கட்டத்தில் முழுமையாக கிருமி நாசினிகள், செயற்கை உரங்கள் என்பன தடை செய்யப் படவாய்ப்பு உள்ளது. சூழல் நஞ்சாகும் நிலைமையை மாற்ற வேண்டிய கட்டாயம் உலக அரசுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே அந்நிலை வருகின்றபொழுது விவசாயிகள பழைய பாரம்பரிய இயற்கை விவசாய முறைக்கு மாறித்தான்ஆகவேண்டும் காலத்தின தேவை அறிந்து நாம் முற்கூட்டியே அந்நிலைகுத் தயார்படுத்துவதற்கு உருவாக்கிய இந்தபயிர்ச் செய்கை முறையைப பின்பற்றி விவசாயிகளும் விவசாய உற்பத்திகளை நுகரும் பொது மக்களும் பயனடைய வேண்டுகின்றேன்

# அரசாங்கம் செய்மதிகளை விண்ணில் ஏவவில்லை

## அமைச்சர் திஸ்ஸவிதாரண



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் செய்மதிகள் எதனையும் விண்ணில் செலுத்தவில்லை என விஞ்ஞானம் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம், சீன நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கடந்த வருடம் செய்மதி ஒன்றை விண்ணில் செலுத்தியதாக கூறப்பட்டது.

எனினும் அப்படியான செய்மதி எதனையும் இலங்கை விண்ணில் செலுத்தவில்லை என அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் சீ.பெரேரா நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சீனாவின் தனியார் நிறுவனமும், இலங்கையின் தனியார் நிறுவனமும் இணைந்து அதனை மேற்கொண்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# நாட்டின் ஐக்கியத்தை ஏற்றால் நாம் ஆதரவு வழங்குவோம்

## பொதுபல சேனா தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது கொள்கைகளை திருத்திக் கொண்டு அரசியலில் ஈடுபடுமாயின், அந்த கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஐக்கியத்தை ஏற்றுக்கொள்ளும் மற்றும் பௌத்த மதத்திற்கு முதன்மை இடம் வழங்கி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் கொள்கைகளை ஆராய்ந்து அவருக்கு எமது அமைப்பு தயக்கமின்றி ஆதரவு வழங்கும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் கொள்கைகளை ஆராய்ந்தே நாங்கள் ஆதரவு வழங்குவோம்.

பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாராக இருந்தால், அவருக்கு பின்னால், அரச சார்பற்ற குழுக்கள் இருக்கக் கூடும்.

கடந்த காலங்களில் தனி நபர்களின் அடையாளம் மற்றும் வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சிலர் ஆதரவு வழங்கினர். வேட்பாளரின் கொள்கைளை நாங்கள் கவனத்தில் கொள்வோம்.

பௌத்த மதத்திற்கு முதன்மை இடத்தையும் நாட்டின் ஐக்கியத்தை ஏற்றுக்கொள்ளும் எந்த தரப்பாக இருந்தாலும் நாங்கள் ஆதரவு வழங்குவோம்.

அது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா என்பது முக்கியமல்ல. அவர்கள் தமது கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டியது முக்கியம்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் சரியான பார்வையுடன் செயற்படும் நபருக்கும் நாங்கள் ஆதரவு வழங்கத் தயார் எனவும் கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# தாக்குதல் நடத்திய நபர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு

## 10 பேர் விடுதலை

(கொழும்பு)

பிரபல இசைக் கலைஞர்களான ரூகாந்த குணதிலக்க, சந்திரலேகா பெரேரா ஆகியோர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பத்து பேரும் நேற்றுக்காலை 7.30 மணியளவில் சிறையிலிருந்து வெளியேறியதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன தெரிவித்தார்.

இவர்களில் 9 பேர் களுத்துறை சிறையிலும் ஒருவர் வெலிகடை சிறையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், இசைக்கலைஞர்களை வீட்டைத் தாக்கி கொலை மிரட்டல் விடுத்திருந்ததாக கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அவர்களுக்கு நீதிமன்றம் நான்கரை ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநீதம்பிள்ளை விசாரணைகளை தன்னிச்சையாக நடத்த முடியாது

## அது மனிதவுரிமை மீறல் என்கிறார் அமைச்சர் டிலான்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பதற்காக ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் விசாரணைகளை தன்னிச்சையாக மேற்கொள்ள முடியாது அது மனிதவுரிமை மீறல் நடவடிக்கையாக அமைந்து விடும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக உள்ளக ரீதியில் இலங்கை முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச சமூகம் உதவவேண்டுமே தவிர இலங்கைக்கு பலவந்தமாக வந்து விசாரணைகளை நடத்த முயற்சிக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அடுத்தகட்ட நகர்வுகள் எவ்வாறு அமையும் என்பது குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்.

யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் உள்ளக ரீதியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக மனிதவுரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பதற்காக ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் விசாரணைகளை தன்னிச்சையாக மேற்கொள்ள முடியாது.

அது மனித உரிமை மீறல் நடவடிக்கையாக அமைந்துவிடும். குறித்த நாட்டு அரசாங்கத்தின் அனுமதியின்றி எதனையும் செய்ய முடியாது. அவ்வாறு நவநீதம்பிள்ளை நடவடிக்கைகளை எடுப்பாரானால் அது மனித உரிமை மீறலாக அமைந்துவிடும்.

உள்ளக செயற்பாடுகளுக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் வழங்கவேண்டுமே தவிர இலங்கையில் பலவந்தமாக விசாரணைகளை நடத்த முடியாது.

இதேவேளை, நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகள் பக்கச்சார்பாகவே இருப்பதாக இலங்கையில் உள்ள மக்களினால் உணரப்படுகின்றது. எனவே அவர் பக்கச்சார்பற்றவர் என்பதனை வெளிக்காட்டவேண்டியது அவசியமாகும். இலங்கை தொடர்பில் நவநீதம்பிள்ளை முன்கூட்டிய தீர்மானத்தை எடுத்துவிட்டதாகவே நாங்கள் உணர்கின்றோம். அது நியாயமானதல்ல. அவர் பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்ளவேண்டும்.

நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகள் இலங்கையில் அனைத்து. இனங்களிலும் உள்ள இனவாதிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றன. இலங்கையில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து மக்களும் வாழ்கின்றனர் என்பதனை நவநீதம்பிள்ளை புரிந்துகொள்ளவேண்டும். நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகள் சுயாதீனமாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

உள்ளக விசாரணையை பொறுத்தமட்டில கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய விசாரணை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. எனவே அவற்றை குழப்பும் வகையில் சர்வதேச செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது. யுத்தத்தின் காயங்களை ஆற்றவே நடவடிக்கை வேண்டும். மாறாக அவற்றை மேலும் கிளறிவிடக்கூடாது.

இதேவேளை, தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் தற்போது இலங்கையில் பேசப்பட்டு வருகின்றது. அந்த உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவானது தண்டனை வழங்காத அதேவேளை மன்னிப்பு வழங்குவதை அடிப்படையாகக்கொண்ட செயற்பாடாகும்.

அவ்வாறு பார்க்கும்போது இலங்கையில் யுத்த முடிவின் பின்னர் சுமார் 12ஆயிரம் முன்னாள் போராளிகள் மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளனர். அப்படி பார்க்கும் போது அரசாங்கத்தினால் சிறந்த நல்லிணக்கம் வெளிக்காட்டப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

அண்மையில் நான் வியட்நாமுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தேன். அப்போது அங்கு இன்னும் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படாமல் உள்ளன என்று எனக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால் இலங்கையில் 90 வீதத்துக்கும் அதிகமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விட்டன. அந்தவகையில் பார்க்கும்போது யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் எமது அரசாங்கம் பாரிய முன்னேற்றங்களை வெளிப்படுத்தியுள்ளது என்றார். (2)

# வரட்சி நிலை தொடர்வதால் மின்னை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

## மின்சாரசபை தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

வரட்சி காரணமாக எரிபொருள் மூலமான மினஉற்பத்திக்கு கோடிக் கணக்கான ரூபாவை அரசாங்கம் தினமும் செலவிட்டே மக்களுக்குத் தடையின்றி மின்சாரம் வழங்குகிறது எனவும் மக்கள் மின்சாரத்தை சிக்கனப்படுத்துவதில் அக்கறைகாட்ட வேண்டுமெனவும் மின்சார சபைத் தலைவர் டபிள்யூ பி.கணேகல தெரிவித்துள்ளார்.

தொடரும் வரட்சி காரணமாக மின் உற்பத்தித்துறையில் எதிர்நோக்க நேர்ந்துள்ள நெருக்கடிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த டபிள்யூ. பீ. கணேகல மேலும் குறிப்பிடுகையில்.

நூற்றுக்கு 12 வீத மின்சாரமே நீர்மின் உற்பத்தி மூலம் பெறப்படுகிறது. மீதம் 88 வீதமான மின்சாரம் எரிபொருள் மின் உற்பத்தி மூலமே பெறப்படுகிறது. இத்தகைய தருணத்தில் மின் பாவனையாளர்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் மூலம் 600 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதால் மின் துண்டிப்பிற்கான அவசியம் ஏற்படாது. தொடர்ச்சியாக தடையின்றி மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படும்

தொடரும் வரட்சி காரணமாக மின் உற்பத்தி நீர் நிலைகளில் மிகக் குறைவான நீர் மட்டமே தற்போதுள்ளது. மேல் கொத்மலை நீர் மின் திட்டத்திலிருந்து தற்போது மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதில்லை. மக்களின் குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்வதற்காக அந்த நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இம் மாத இறுதியிலேயே எதிர்பார்க்கும் மழை வீழ்ச்சி கிடைக்கும் என நம்புகிறோம். வரட்சி நிலை நீங்கியதும் தொடர்ந்து நீர் மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். அதுவரை மக்களுக்கு தடையின்றி மின்சாரத்தை வழங்குவதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை அரசாங்கம் செலவழிக்க நேர்ந்துள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு மக்கள் மின்சாரத்தை மிக சிக்கனமாக உபயோகிக்க வேண்டுமென மின்சாரசபை கேட்டுக்கொள்கிறது.

அத்துடன் வீண் விரயத்தை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறும் பொது மக்களுக்கு வலியுறுத்துகின்றோம் எனவும் அவர் மேலும தெரிவித்தார். (2)

# உலக இளைஞர் மாநாட்டின் போது சகல நாடுகளும் பங்கேற்க வேண்டும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள இவ்வாண்டுக்கான உலக இளைஞர் மாநாட்டில் உலகெங்கிலும் உள்ள நாடுகளின் பெருமளவிலான அமைச்சர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாநாடு இலங்கையில் எதிர்வரும் மே மாதத்தில நடைபெறவிருப்பது குறித்து நாட்டில் உள்ள இராஜதந்திரிகளுக்கு அறிவுறுத்தும் நிகழ்வில் அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நிறைவேற்றிய இரண்டு தீர்மானங்கள் மூலம் அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது.

இம்மாநாட்டை நடத்துவதற்காக இலங்கை அரசாங்கம் பரந்த அடிப்படையிலான ஒழுங்குகளை செய்து வருகின்றது. இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு இந்த உலக மகாநாடு வழிவகுக்கும்.

பொதுநலவாய இளைஞர் மன்றத்தில் தலைமைதாங்கும் என்ற முறையில் இளைஞர் தொடர்பான விவகாரங்களுக்கு இலங்கை முக்கியத்துவம் அளிக்கிறது.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இளைஞர் விவகாரங்களில் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றங்களுக்கு இவ்வருடம் நடைபெறும் மாநாட்டில் தொனிப்பொருள் தயாரிக்கப்படும்.

சகல அம்சங்களிலும் இளைஞர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். சிறந்த ஆளுமையை அமைத்தல், செயற்பாடுகள் பற்றிய உண்மையான தகவல்களை வைத்திருத்தல், இளைஞர்களின் உரிமைகளை உலகளாவிய ரீதியில் வலுப்படுத்துதல், இளைஞர்கள் எதிர்நோக்கும் சமத்துவமின்மையை சீரமைத்தல், பால்நிலை சமத்துவம், பின்தங்கிய நிலையில் உள்ள இளைஞர்களுக்கு வலுவூட்டுதல், [illegible]



வுப் பாதுகாப்பை ஊக்குவித்தல், சுகாதார செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், சுற்றாடலை பாதுகாப்பாக வைத்திருத்தல், சமாதானம் நல்லிணக்கப்பாட்டை ஏற்படுத்தல், சம கல்விக்கு வாய்ப்புகள் பெற்றுக் கொடுத்தல், வன்முறையை முடிவுக்கு கொண்டு வருதல், விளையாட்டுத்துறை கலாசார செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல் போன்ற செயற்பாடுகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இளைஞர் உலக மாநாட்டினை சிறப்பிப்பதற்கு சமூகங்களின் பூரண ஒத்துழைப்பை பெறுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. (2)

# துப்பாக்கி சூட்டில் இளைஞன் பலி

(கொழும்பு)

கதிர்காமம் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கதிர்காமம் நகரத்தில் அமைந்துள்ள தொடர்பாடல் மத்திய நிலைமொன்றில் நேற்று முன்தினமிரவு இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

இதுதொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

## ஆன்மீகம் 90

**மலைப்புல்**


மலை மேல் மரங்கள்; மரங்களின் வேர்களின் கீழே சரிவில் பாதை போய்க் கொண்டிருந்தது. சரிவில் நீட்டிக் கொண்டிருந்த வேர்களைப் பிடித்துக்கொண்டு சரிவில் வளைந்து சென்ற சுமார் நான் கடி அகலமுள்ள பாதையில் நடந்து சென்றோம். கிட்டத்தட்ட மலையின் விளிம்புதான் அது. கொஞ்சம் வேகமாக நடந்தாலும் கீழே பள்ளத்தில் விழ வேண்டியதுதான்.

இந்தப் பாதையைத் தாண்டியதும் ஒரு சின்ன வனப்பகுதி. அதன் பெயர் குருவி வனம். பெயருக்கேற்றவாறு குருவிகளின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்ததே தவிர குகைகள் எதனையும் கண்ணால் பார்க்க முடியவில்லை.

இந்த வனத்தினுள்ளே பெரிது பெரிதாக வளர்ந்திருந்த ரோம விருட்சங்கள் பார்ப்பதற்குப் பூதாகரமாகத் தோன்றியது. அம் மரத்திற்கு மேலே முகம் மட்டும் வரைந்து விட்டால் சடை சடையாய்த்தொங்கும் முரட்டு ராட்சகன் ஒருவன் முறைத்துப் பார்ப்பது போலத் தோன்றும். சாம்பல் நிறமாகவும் ரோமம் போல சடை சடையாகத் தொங்கும் விழுதுகளும் ஏதோ திகில் படத்தில் கெமராவைச் சுழற்றிக் காட்டுவது போலக் காட்சியளித்தது. மரத்தில் தொங்கும் சடையைத் தொட்டுப் பார்த்தேன். ஆகா பஞ்சு போல எத்துணை மிருதுவாயிருக்கிறது. இரட்டை லிங்கங்கள், பெரிய மகாலிங்கம் ஆகிய இடங்களில் பார்த்ததைவிட மிகப் பிரமாண்டமான மரங்கள் காடெங்கும் அணிவகுத்து நின்றன.

"உள்ளே காலையா? மாலையா? என்று அறிந்துகொள்ள இயலாதபடியான மங்கிய வெளிச்சம். மழைக் காலங்களில் உள்ளே செல்ல முடியாதது போலும்.

பெரியதொரு மைதானம்... இல்லை. இல்லை பெரியதொரு குளம் நீர் வற்றிய நிலையில் சேரும் சகதியுமாய் மைதானம் போலவே காட்சியளித்துக் கொண்டிருந்தது. இதனை சித்தர் குளம் என்றும் சொல்வார்களாம்.



கோரக்கர் குகை

அருகே நீரோடை ஒன்று குறுக்கிட்டோடியது. அதனைக் கடப்பதற்கு மரத்தாலான பாலம் ஒன்று இயற்கையாக அமைந்திருந்தது.

மரப்பாலத்தைக் கடந்ததும் சிறிது சூரிய வெளிச்சம் எட்டிப் பார்த்தது. அங்கே சற்று தூரத்தில் செல்லும் அந்த ஓடையானது இந்தக் குளத்தில் நீர் நிரம்பிய வாறு செல்லுமாம். ஆனால் குளத்தில் சேறு அதிக அளவில் சேர்ந்து தூர்ந்து போய்விட்டதால் ஓடை நீர் வேறு பக்கமாக திரும்பிச் செல்ல ஆரம்பித்து விட்டதாம்.

முன்பெல்லாம் இந்தக் குருவி வனத்திலே இப்படி சாவகாசமாக வந்து விட முடியாதாம். இந்த நீர் நிலையில் காட்டு மிருகங்களும் பறவைகளும் நீரருந்த வருமாதலால் அவைகள் இல்லாத சமயத்தில் மட்டுமே எட்டிப் பார்க்க முடியும்.

குளத்தைச் சுற்றி வரிசையாக அமைந்திருக்கும் மரங்களில் குருவிகள் அமர்ந்து கீச்சு கீச்சு என்று கத்திக் கொண்டிருக்கும் அழகை இன்றெல்லாம் ரசித்துக் கொண்டிருக்கலாமாம். ஆனால் இன்று நீரற்ற அந்தக் குளத்தில் அறுநீர் பறவைகளாய் வேறிடத்திற்குச் சென்று விட்டனவாம்.

தகவலைச் சொல்லியவாறே சட்டெனத் திரும்பினார். அங்கிருந்த மரத்தடி ஒன்றில் சிறியதொரு சிவலிங்கம் காணப்பட்டது. யாரேனும் சித்தர் வழிபட்டிருப்பாரோ? அவ்வளவு பெரிய மரத்தடியில் பக்கத்தே சலசலத்தோடும் ஓடையருகே ஒரு மேடை. அமர்ந்து தவம் செய்ய ஏற்ற சூழல்.

வந்திருந்தவர்கள் வணங்கிவிட்டு நகர்ந்து கொண்டிருந்தனர். மரத்தடி சிவலிங்கத்திற்கு சூடம் ஏற்றி விட்டு நிமிர்ந்து பார்க்கும் பொழுது எங்கள் மூவரைத் தவிர பக்கத்தில் யாருமில்லை. நான், சாக்ரடீஸ், கோமதிநாயகம் ஆகிய மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

அடக்கடவுளே! பாதை தெரியாத பயணம், "நாகராஜ்" காடே எதிரோலித்தது. ஊகூம்.. பதிலில்லை.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**09**

...தன் கவிதைக்குக் குருநாதர் நீங்கள் என்றும் தன் பேச்சுக்குக் குருநாதர் கலைஞர் என்றும் சொல்லி மகிழ்ந்தார் என்று சொன்னேன்.

சுரதாவால் இதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை.

சட்டென்று பொடி போட்டுக் கொண்டே வெடி போட்டார். என்னடா இது! ஆண்குழந்தைக்கு ஒரு தகப்பன். பெண் குழந்தைக்கு ஒரு தகப்பனா?

நான் சிரிக்காமலிருக்கச் சிரமப் பட்டேன்.

ஏறக்குறைய எல்லோரையும் தெரியும் என்றாலும் அவர் பரிந்துரைக்குப் போவதில்லை.

கேட்டால் சூரியனைத் தெரியும்; தொட்டுவிட முடியுமா? என்பார்.

ஒரு கவியரங்க மேடையில் ஒரு கவிஞர் தான் எழுதிய ஒரே ஒரு வெண்பாவைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

எங்களுக்குத் தாங்க முடியவில்லை.

கொஞ்சிக் கொஞ்சியே தன் ஒரே குழந்தையைக் கொன்று விடுவார் போலிருந்தது எனக்கு.

கவியரங்கத் தலைவர் சுரதாவிடம் ஒரே வெண்பாவை எழுதிக் கொண்டு ஏன் இந்தக் கவிஞர் கூறியது கூறுகிறார்? என்றேன்.

சுரதா உடனே சற்றும் யோசிக்காமல், சட்டென்று கேட்டார். ஒற்றைப் பல்லை வைத்துக் கொண்டு இவன் ஏன் திரும்பத் திரும்பச் சிரிக்கிறான்.

சுரதாவிடம் எனக்குப் பிடித்த இன்னொரு பண்பு அவரது இலக்கிய நேர்மை.

நாடோடி மன்னன் படத்தில் வரும் **கண்ணில் வந்து மின்னல்போல காணுதே** என்ற பாடலில் சுடர்மின்னல் கண்டு தாழை மலர்வது போலே உனைக்கண்டு உள்ளமே மகிழ்ந்தேன் என்று சுரதா எழுதியிருந்தார்.

சூரியனைக் கண்டு தாமரையும் நிலவைக் கண்டு அல்லியும் மாலைக் கருக்கலில் மல்லிகையும் மலரும் என்பன பொதுச் செய்திகள்.

மின்னலின் வெளிச்சத்தில் தாழை மலருகிறது என்பது புதுச் செய்தி.

இதை எங்கிருந்து பிடித்தீர்கள் என்று சுரதாவிடம் கேட்டேன்.



## சுரதா

எனக்கென்ன தெரியும் கலித் தொகையில் படித்தேன் என்றார் அந்தக் களங்கமில்லாக் கவிஞர்.

இலக்கியத்தின் எந்த வடிவத்தை எடுத்தாண்டாலும் ஒரு நல்ல கவிஞன் தன்னைக் கவிதைச் சங்கிலியிலிருந்து கழற்றிக் கொள்ள விரும்ப மாட்டான்.

சுரதா வசனம் எழுதும்போதுகூட கவிதை வாசனை கமழவே கமழும்.

கொடியவள் ஒருத்தி ஆசைவார்த்தை பேசிக் கதாநாயகனைத் தழுவ வருகிறாள்.

கதாநாயகன் தள்ளி நின்று சொல்கிறான். தொடாதே வஞ்சகி! நீ தொட்டால் விஷம் கூடச் செத்துவிடும்.

கன்னத்தில் அடித்து விட்டுக் காதுக்குள் போவதுதான் வசனம்- அது சுரதாவுக்குச் சொந்தம்.

சினிமா என்கிற தங்கச் சிறையிலிருந்து சுரதா தப்பித்து வந்தாரா அல்லது விடுவிக்கப்பட்டாரா என்பது எனக்கு விளங்கவில்லை.

சுரதா ஒரு சுறாமீன். சினிமா என்னதான் தங்கத் தொட்டியாக இருந்தாலும் சமுத்திரத்தைப் போன்ற சௌகரியம் வருமா?

சுரதாவின் பலம் அவரது சுதந்திரம். அவரது பலவீனம்-அதிகமான சுதந்திரம்.

எழுத்தாளனுக்கு ஏதாவது ஒரு நிர்ப்பந்தம் இருந்தே ஆகவேண்டும்.

இருந்திருந்தால்- உரையிலும் கவிதையிலும் இன்னும் சில சிகரங்களைச் சுரதா எட்டியிருக்கக் கூடும்.

அவருடைய சொற்சித்திரங்கள் சுகமானவை. சிலந்தியின் வலையைச் சிலந்திதான் பின்ன முடியும் என்பது மாதிரி சுரதாவின் சொல்லோவியங்களைச் சுரதாதான் வரைய முடியும்.

அயலூரில் இருக்கும் காதலியை இரவில் சந்திக்கச் செல்கிறான் காதலன்.

ஊரே நிசப்தத்தில் நித்திரை கொள்கிறது.நட்சத்திரங்களைக் காவலுக்கு வைத்து விட்டு நிலவுகூட உறங்கி விடுகிறது.

காதலனின் காலடிச் சப்தம் உறங்கிக் கிடந்த நாய்களை உசுப்பி விடுகிறது.

துரத்தும் நாய்களைத் துரத்துவதற்குக் கீழே குனிந்து கல்லெடுக்கிறான்.

கல் தரையோடு பதிந்திருக்கிறது.

அப்போது அவன் சொல்கிறான்.

இந்த ஊரில் நாய்களை அவிழ்த்து விட்டுவிட்டுக் கல்லைக் கட்டிப் போட்டிருக்கிறார்களே!



சுரதாவின் இந்தச் சொல்லோவியத்தை என் இதயச் சுவர்களில் எழுதி மாட்டிக் கொண்டேன்.

பின்னாளில் பாரசீகக் கவிதைகளுக்குள் பயணம் செய்தபோது இதே ஓவியத்தை சாஅதியும் தீட்டியிருக்கக் கண்டேன். பரவாயில்லையே! சாஅதி கூட எங்கள் சுரதா மாதிரி சிந்தித்திருக்கிறாரே என்று சொல்லிக் கொண்டேன்.

இந்த வயதிலும் உடும்பு மாதிரி உடம்பை வைத்திருக்கிறார்.

அதற்குக் காரணம் அவரது ஒழுக்கம்.
அவர் சந்தோசமாய் இருக்கிறார்.
காரணம்- சார்பின்மை.

அவரைச் சிலருக்குப் பிடிக்கும்.
காரணம் அவர் குழந்தை; எல்லோரோடும் பழக ஒப்பிவிடும்.

அவரைச் சிலருக்கிப் பிடிக்காது.
காரணம் அந்தக் குழந்தை எல்லோர் முகத்திலும் எச்சிலும் துப்பிவிடும்.

சில நேரங்களில் என்னை அவர் கடுமையாய் விமர்சிப்பதாய்க் காற்று வந்து காதில் சொல்லும்.

எனக்கு மட்டும் தெரியும்.

"தாய் இறுக்கிப் பிடிப்பது பிள்ளை வீழாமல் இருக்கவே"

-வைரமுத்து-

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# குருவா? தோழனா?

லோகேஷ் குருகுலத்தில் பயின்றபின் தன் சொந்த கிராமத்திற்குத் திரும்பினான்.

அவனுடைய தந்தை பத்து ஏக்கர் நிலத்தை அவன் பொறுப்பில் விட்டுவிட்டுத் தான் ஓய்வு பெற எண்ணி, "மகனே! விவசாயத் தொழிலைப் பற்றி எனக்குத் தெரிந்ததை நான் உனக்கு விளக்கிக் கூறுகிறேன்.

நீ உனது சிந்திக்கும் ஆற்றலையும், படித்த விடயங்களையும் கொண்டு, விவசாயத்தை





சிறப்பாகச் செய்து மேன்மை அடைவாய்!" என்று வாழ்த்தினார்.

தந்தையின் அனுபவத்தையும், தனது அறிவாற்றலையும் சேர்த்து, லோகேஷ் நூதன முறைகளைப் பின்பற்றி விவசாயம் செய்ததில், முதல் ஆண்டு சுமாராக லாபம் கிடைத்தது.

தனது சுய அனுபவத்தினால் மேலும் விவசாயத்தைப் பற்றிக் கற்றுக் கொண்ட லோகேஷ், அடுத்து வந்த ஆண்டுகளில் அமோக விளைச்சலையும், அதிக லாபத்தையும் பெற்றான்.

லோகேஷின் திறமை மன்னரின் செவிகளையும் எட்டியது. உடனே, அவர் நாட்டிலுள்ள பல விவசாயத் தொழிலாளர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் லோகேஷைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.

தன்னுடைய வெற்றியின் ரகசியத்தை மற்ற விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளுமாறு மன்னர் வேண்டுகோள் விடுத்தார்.

செய்தியறிந்த காமேஷுக்கு லோகேஷ் மீது பொறாமை ஏற்பட்டது.

இருபது ஆண்டுகளாக விவசாயம் செய்து வரும் தன்னைவிட நேற்று முளைத்தவன் எப்படி திறமைசாலி ஆவான் என்று எண்ணிய காமேஷ், லோகேஷை தன் கிராமத்திற்கு அழைத்தான்.

ரமேஷும் கிராமத்தினர் அனைவரும் கூடியிருந்தனர்.

லோகேஷை தன்னருகில் அழைத்த காமேஷ், "விவசாயத்தில் நான் கரை கண்டவன்! அப்படிப்பட்ட என்னிடம் வந்து நீ விவசாயத்தைப் பற்றி ஆலோசனை கேட்காமல் விட்டுவிட்டாயே!" என்றான்.

அதற்கு லோகேஷ் பணிவுடன், "உங்களை இதுவரை சந்திக்காமல் போனேனே என்று வருந்துகிறேன்.

விவசாயத்தைப் பற்றி எனக்குக் கற்றுக் கொடுங்கள்!" என்றான்.

இதைக் கேட்ட காமேஷ் உடனே தனக்குத் தெரிந்த விடயங்களைச் சொல்லிக் கொடுத்தான்.

காமேஷின் விளக்கம் முடிந்ததும், லோகேஷ் அவனை வணங்கி, "இவ்வளவு திறமைவாய்ந்த நீங்கள் தயவுசெய்து என்னை உங்கள் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுங்கள்! இனி நீங்கள்தான் என் குரு!" என்றான்.

காமேஷுக்கு உற்சாகம் கரை புரண்டு ஓடியது.

அங்கு கூடியிருந்த மற்றவர்களை, குறிப்பாக ரமேஷை கர்வத்துடன் பார்த்தான்.

அப்போது, ரமேஷ் முன் வந்து லோகேஷிடம், "தம்பி! காமேஷ் ஒரு மேதாவி! அவரை நீ குருவாகக் கொண்டது சரியே! ஆனால் நான் ஒரு சாதாரணமான ஆள்! நாமிருவரும் நண்பர்களாக இருப்போம்! உனக்குத் தெரிந்த விடயங்களை எனக்கு சொல்லிக் கொடுப்பாய்!" என்று கூற, பலரும் ரமேஷைப் பின்பற்றி லோகேஷிடம் நட்புக்கரம் நீட்டினர.

விவசாயத்தில் தனக்குத் தெரிந்த உத்திகளை லோகேஷ் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள, தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்த காமேஷ் அவற்றுக்கு செவி மடுக்காமல் வீடு திரும்பி விட்டான்.

அந்த ஆண்டு, காமேஷைத் தவிர மற்றவர்களின் நிலங்கள் அமோக விளைச்சலைக் கண்டன.

கிராமத்தினர் அவனை துக்கம் விசாரிக்க வந்து, "விவசாயத்தில் குருவாகிய உனக்கு இந்த கதியா?" என்று கேட்க, "பரவாயில்லை! லோகேஷ் சொல்லிக் கொடுத்த விடயங்களை வைத்துக் கொண்டு நீங்கள் பயன் அடைந்தீர்கள்! என் சிஷ்யனின் திறமையைக் குறித்து கர்வம் அடைகிறேன்!" என்று சமாளித்தான்.

"சும்மா" ஒரு பேச்சுக்காக லோகேஷ் உன்னைத் தன்னுடைய குரு என்றால் நீ மேதாவி என்று அர்த்தமாகாது!" என்று மற்றவர்கள் அவன் வாயைக் கிண்டினர்.

உடனே குறுக்கிட்ட ரமேஷ், "அப்படிச் சொல்லாதீர்கள்! மகாபுத்திசாலியான லோகேஷ் நமது காமேஷை குரு என்றால் அது வெறும் பேச்சுக்கல்ல! லோகேஷ் நமது நண்பன்! ஆகவே லோகேஷின் குரு நமது குரு! காமேஷ்தான் நம் அனைவருக்கும் குரு!" என்றான்.

ரமேஷ் உண்மையாகச் சொல்கிறானா இல்லை கிண்டல் செய்கிறானா என்று புரியாத காமேஷ், "லோகேஷைப் போன்ற புத்திசாலி சிஷ்யன் தான் எனக்குத் தேவை! உங்களைப் போன்ற மரமண்டைகள் எனக்குத் தேவையில்லை!" என்றான்.

அதற்கு ரமேஷ், "குரு என்பவர் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பவர்! சிஷ்யன் என்பவன் குருவிடம் கற்றுக் கொள்பவன்!

குருவிற்குக் கற்றுக் கொடுக்கும் யோக்கியதை சிஷ்யனுக்குக் கிடைபாது! ஆனால், நண்பன் என்பவன் தன்னுடைய அறிவை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்பவன்! அதனால்தான், மகா புத்திசாலியான லோகேஷை நாம் நண்பனாக ஆக்கிக் கொண்டோம்!

அவனும் விவசாய நுணுக்கங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டான்.

அவற்றைப் பின்பற்றியதால் இந்த ஆண்டு நமக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது. ஆனால் நம் நண்பர் காமேஷ் தனக்கு எல்லாம் தெரியும் என்கிற விதத்தில் பெருமையடித்துக் கொண்டார். அதனால் அவருக்குத்தான் நஷ்டம் ஏற்பட்டது" என்று கூற, கூடியிருந்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். இவ்வாறு, மீண்டும் காமேஷின் மூக்கு உடைபட்டதுதான் மிச்சம்!




- 1633 - ரோமன் கத்தோலிக்க மத பீடத்தினால் கலிலியோ கலிலிக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பமாகின.
- 1832 - இலங்கையில் கட்டாய அரச சேவையை ஒழிக்கும் ஆணையை பிரித்தானிய அரசர் பிறப்பித்தார்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகள் ஐக்கிய அமெரிக்காவின் படைகளை தென் கரோலினாவில் தாக்கியதுடன் போர் வெடித்தது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசியில் சரணடைந்த அனைத்து ஆபிரிக்க அமெரிக்க படையினர்களும் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு படைகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமாவில் மொபைல் என்ற நகரம் கூட்டணி இராணுவத்திடம் வீழ்ந்தது.
- 1927 - ஷங்காயில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுபபினர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1955 - ஜோனாஸ் சால்க் என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட போலியோ நோய்த் தடுப்பூசி பாதுகாப்பானதென அறிவிக்கப்பட்டது.
- 1961 - சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதரானார்.
- 1980 - லைபீரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து சாமுவேல் டோ நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்: 130 ஆண்டுகால மக்களாட்சி அமைப்புமுறை முடிவுக்கு வந்தது.
- 1981 - முதலாவது மீள் விண்ணோடம்- கொலம்பியா விண்ணோடம் விண்வெளியை நோக்கி ஏவப்பட்டது.
- 1983 - பிரித்தானியத் திரைப்படமான காந்தி எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்றது.
- 1996 - யாஹூ! இனது முதற் பொதுப் பங்கு வழங்கல.
- 2007 - இந்தியா அக்னி-III என்ற தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும் நடுத்தர ஏவுகணையை 3000 கி.மீ தூரத்துக்கு வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

**பிறப்புகள்**

- கி.மு 599 - மகாவீர், ஜெய்னிச மதத்தை உருவாக்கியவர். (இ. கி.மு 527)
- 1884 - ஓட்டோ மெயெரொஃப், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ. 1951)
- 1907 - வி. நாகையா, திரைப்பட நடிகர், இயக்குனர்
- 1932 - லக்ஸ்மன் கதிர்காமர், இலங்கை அரசியல்வாதி (இ. 2005)

**இறப்புகள்**

- 1945 - பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 32 ஆவது ஜனாதிபதி (பி. 1882)
- 1971 - ஈகர் தம், நோபல் பரிசு பெற்ற உருசியர் (பி. 1895)
- 1997 - ஜார்ஜ் வால்ட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1903)
- 2006 - ராஜ்குமார், கன்னட நடிகர் (பி. 1929)

**சிறப்பு நாள்**

- சர்வதேச வீதியோரச் சிறுவர்கள் தினம்
- மனித விண்வெளிப் பயணத்துக்கான சர்வதேச தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஜய” வருட ராசிபலன்கள்

## மிதுனம்

## வைகாசி முப்பதிற்குமேல் வளர்ச்சி!



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்,**

**வைகாசி முப்பதிற்குமேல் வளர்ச்சி பெருகும்! புதுமை செய்வதிலும் புரட்சி செய்வதிலும் புகழ் கொடி நாட்டும் மிதுன இராசிநேயர்களே!**

பிறக்கும் புத்தாண்டில் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து பெருமைகள் காணப் போகிறீர்கள். இனம்புரியாத கவலைக்கும், இதயத்தில் குடிகொண்டிருக்கும் மனக்குழப்பத்திற்கும் இடையில் சிக்கித் தவிக்கும் உங்களுக்கு ஜய வருடம் ஜெயத்தை வழங்கப்போகிறது.

வருடத் தொடக்கத்தில் கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகமான புதன் நீச்சம் பெற்று அதை தனாதிபதி சந்திரன் பார்ப்பதால் தொழில் வளம் மேலோங்கும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும்.

**பயத்தை விலக்குமா இந்த ஜய வருடம்?**

மனோபயம் மிக்கவர்கள் நீங்கள். ஆனால், மனப்பயத்தை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டீர்கள். அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் உங்களை அசகாய சூரர்கள் என்று சொல்வார்கள். எதைச் செய்தாலும் இரட்டிப்பு சிந்தனையே உங்களுக்கு இருக்கும். செய்வோமா, வேண்டாமா என்று சிந்தித்து முடிவெடுக்க முடியாமல் சிக்கித் தவிக்கும் விடயங்களில்

சிவல்புரி சிங்காரம்

தெய்வ பலத்தை நாடுவீர்கள்.

புதனின் பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை எப்படி அமையும் என்பதை எடை போட்டுப் பார்க்கலாம். சப்தமாதிபதியாக குரு விளங்குவதால் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் பொழுது குரு பலம் பார்த்துச் செய்வதே நல்லது. அப்பொழுதுதான் குடும்ப ஒற்றுமையும் குழந்தைப்பேறும் கிடைக்கும்.

**யோகங்கள்**

இப்படிப்பட்ட அமைப்புகளைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு தொடக்கத்தில் செவ்வாய், சனியின் வக்ரத்தோடு பிறக்கிறது. ஜென்மத்தில் குரு நின்றாலும் அதன் பார்வை 5,7,9 ஆகிய இடங்களில் பதிவதால் மிஞ்சும் பலன்கள் உங்களுக்கு கிடைக்கும்.

பொதுவாக குரு பார்க்க கோடி நன்மை என்பதால் வருடத் தொடக்கத்தில் ஜென்ம குருவின் பார்வையால் பலன் கிடைக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் உச்சம் பெற்ற குருவால் உன்னத வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வருடத் தொடக்கத்தில் சுக்ரனும், சனியும் பரிவர்த்தனை யோகத்தைப் பெற்றிருக்கிறார்கள். யோகங்களில் சிறந்தது, பரிவர்த்தனை யோகம் ஆகும். பஞ்சம ஸ்தானத்தில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும். எத்தனையோ முறை பஞ்சாயத்துக்கள் வைத்தும் முடிவடையாமல் இருந்த பூர்வீக சொத்து தகராறுகள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரலாம். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். அவர்களின் கல்வி நலன் கருதியும், கடல் தாண்டும் முயற்சி கருதியும் நல்ல முடிவெடுப்பீர்கள்.

**உத்தியோக முன்னேற்றம்**

தனாதிபதி சந்திரன், ஆறுக்கு அதிபதி செவ்வாயுடன் இணைந்து சந்திர மங்கள யோகத்தை உருவாக்குவதால் உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றமும் ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

விரயாதிபதி சுக்ரனைக் குரு பார்ப்பதால் விரயங்கள் கூடும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். கூடப் பிறந்தவர்கள் குதர்க்கமாகப் பேசி குடும்பத்தில் பிரச்சினையை உருவாக்கி வைத்த நிலை இனி அகலும்.

கொடுக்கல்- வாங்கல்கள் திருப்திகரமாக இருந்தாலும் கேது பார்வை இருப்பதால் மனதில் இனம்புரியாத கவலை மேலோங்கும்.

லட்சியங்கள் நிறைவேறவும், லட்சங்கள் கைகளில் புரளவும் அச்சமின்றி வாழ அடித்தளமிடவும், ஆன்மிகம்தான் வழிகாட்டும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். சூரிய பலம் நன்றாக இருந்தால்தான் வழக்குகளில் வெற்றி கிட்டும். அரசியல்வாதிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். சிலருக்கு பொறுப்புகள் மாற்றப்பட்டு புதிய திருப்பங்களை சந்திக்க நேரிடும்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி (21.06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும், மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். இதன்விளைவாக சுகஸ்தானமும் செயல் ஸ்தானமும் பலம் அடைகிறது.



அந்த அடிப்படையில் காலங்காலமாக உத்தியோகத்தில் இருந்தவர்கள் இப்பொழுது கட்டாய ஓய்வுபெற்று தொழில் தொடங்க முன்வருவர். எல்லாவற்றிற்கும் மேலாக அலைச்சல் குறைந்து ஆதாயம் பெருகும்.

இதுவரை சனியின் பிடியில் சிக்கியிருந்த ராகு இப்பொழுது தனித்து பின்னோக்கி வந்து வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து வைப்பார். வாகனங்களால் தொல்லைகளும், விருந்தினர்களால் மன நிம்மதி இழப்பும் உருவாகலாம்.

கேதுவின் ஆதிக்கம் தொழில் ஸ்தானத்தில் அமைவதால் திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். நிலையான வருமானத்தைத் தேடிக் கொள்ள நீண்ட நாளாக எடுத்த முயற்சி கைகொடுக்கும். கலை ஆர்வம் மிக்கவர்கள் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவர். மற்றவர்களுக்கு பணப்பொறுப்பு சொன்னால் மனக்கலக்கம் உருவாகும்.

சுக ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது சொல்லை செயலாக்கிக் காட்ட சர்ப்ப பரிகாரங்களை செய்வது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் உங்களுக்குரிய அனுகூல ஸ்தலங்களில் சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வதன் மூலம் சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**ஆறாம் இடத்தில் அடியெடுத்து வைக்கும் சனி!**

ஜய வருடம் மார்கழி மாதம் தொடக்க நாள் முதல் சனி பகவான் ஆறாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எட்டாம் இடத்திற்கு அதிபதி சனி ஆறாம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயற்படும் என்பதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

திடீர், திடீரென குணங்கள் மாறி உங்களை விட்டு விலகிய வேலையாட்கள் மீண்டும் வந்திணைவர். கடன் சுமை குறையும். ரண சிகிச்சை செய்தால் தான் குணமாகும் என்று சொன்ன மருத்துவர்கள் இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே வியாதிகளும் தீர்ந்தது என்பார்கள்.

ஒன்பதுக்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் ஒரு சிலருக்கு அதிக பயணங்களும் அலைச்சல்களும் உருவாகலாம். அன்னை, தந்தையரின் சொல்லுக்கு மதிப்பளித்து அவர்கள் காட்டிய வழியில் நீங்கள் சென்றால் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும்.

மாசி 30 ஆம் திகதி முதல் வருடக் கடைசி வரை மீண்டும் வக்ர இயக்கத்தில் சனி வருகிறார். சனியில் வக்ர காலத்தில் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். வெளிவட்டாரப் பழக்க வழக்கத்தில் விழிப்புணர்ச்சி இல்லையென்றால் தெளிவான மன நிலையைப் பெறமுடியாது.

**வழிபாட்டின் மூலமே நன்மை பெறும் காலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாய்- சனி சேர்க்கை ஏற்படுகிறது. இக்காலத்தில் பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகலாம். பூர்வீக சொத்துக்களிலும் பத்திரப்பதிவால் கலக்கம் ஏற்படலாம்.

**குருப்பெயர்ச்சி!**

தன ஸ்தானம் எனப்படும் இரண்டாம் இடத்தில் வைகாசி 30 ஆம் திகதி (13.06.2014) அன்று குரு சஞ்சரிக்கப்போகின்றார். சஞ்சரிக்கும் குரு சாதாரணமாக சஞ்சரிக்கவில்லை.

உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். அதன் பார்வை 6,8,10 ஆகிய இடங்களில் பதிந்த அந்த இடங்களை எல்லாம் புனிதப்படுத்துகிறது.

**ஆறினைக் குருதான் பார்த்தால்**
**அரியதோர் பணியும் கிட்டும்**
**எட்டினைக் குருதான் பார்த்தால்**
**எளிதிலே நோய்கள் தீரும்**
**பத்தினை குருதான் பார்த்தால்**
**பதவியும் தொழிலும் வாய்க்கும்!**

என்பது ஜோதிட நியதி.

இத்தகைய அமைப்பு உங்கள் ஜாதகத்தில் இருப்பதால் நீங்கள் செய்யும் செயல்களில் எல்லாம் இனி தொய்வு ஏற்படாது. தொல்லை தந்தவர்கள் விலகுவர். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். சிந்தையில் இருந்து வாட்டிய சில்லரைத் தொல்லைகள் அகலும்.

பத்தினை குரு பார்க்கும் போது, பழைய தொழிலை மாற்றி அமைப்போமா என்ற எண்ணம் மேலோங்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பொறுப்புகள் மாறும். குருவின் வக்ர காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. அதிசார குரு பயணம் செய்யும் பொழுது அதிக விழிப்புணர்ச்சி உங்களுக்கு தேவை.

**மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

**இடமாற்றத்தால் இனிய மாற்றம் ஏற்படும்!**

ஜய வருடத் தொடக்கத்தில் ஜென்ம



குருவின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. எனவே, வைகாசி 30 வரை வருமானம் போதுமானதாக அமையாது. குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் குடும்ப முன்னேற்றம் கூடும். மனக்குறைகள் அகலும். மங்கல நாண் சூடும் வாய்ப்பும் உருவாகும். கணவன்- மனைவிக்குள் அடிக்கடி ஏற்பட்ட சச்சரவுகள் மாறி அமைதி பிறக்கும். ஆச்சரியப்படும் விதத்தில் உத்தியோகம் தொழிலில் உயர்வு கிடைக்கும்.

சர்ப்பக் கிரகத்தின் பெயர்ச்சிக்குப் பின்னால் தனி வீடு, இடம் வாங்க வாய்ப்புகள் கைகூடி வரும். பார்க்கும் தொழிலால் லாபம் கிடைத்து பணப்பை கனக்கும். உடல்நலத்தில் மட்டும் பழைய நோய் மீண்டும் வந்து அச்சுறுத்தலாம். வியாதிக்கான அறிகுறி தெரியும் பொழுதே மருத்துவ ஆலோசனைக்களை பெறுவது நல்லது. குரு வழிபாடும், குலதெய்வ வழிபாடும் உங்களுக்கு குதூகலத்தை வரவழைக்கும்.


**சிறப்பு வழிபாடுகள்!**

**பொதுவாக இராசிநாதன் புதனுக்குரிய வழிபாடான ராமபிரான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ராமபிரான் ஜாதகம் கிடைத்தாலும் பூஜை அறையில் வைத்து வழிபாடு செய்யலாம். சிறப்பு வழிபாடாக விஷ்ணுவையும் லக்ஷமியையும் வழிபட்டு உன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.**

நாளை கடகம்....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்துத்துவா தலைவர்களாக மாறும் தமிழக கட்சித் தலைவர்கள்!



...தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் முடிந்து விட்டது. அனைத்துக் கட்சிகளுமே இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை அனைவரையும் வேட்பாளர்களாக அறிவித்துள்ளன. தமிழக தேர்தல் களம் ஆறுமுனைப் போட்டியைச் சந்திப்பது இதுவே முதல்முறை என்பதால் தலைவர்களின் பிரசாரத்திற்கு பஞ்சமில்லை. இரண்டாம் கட்டத் தலைவர்கள் நொறுக்குத் தீணி போல் தலைவர்களால் பயன்படுத்தப்பட்டு அவர்களும் ஆங்காங்கே சுற்றி வருகிறார்கள். திருவாளர் வாக்காளர் இத்தனை பிரசாரங்களையும் பார்த்து, தன் வாக்குகளை யாருக்கு அளிக்க வேண்டும் என்ற முடிவை ஏப்ரல் 24 ஆம் திகதி எடுக்கப் போகிறார் என்பதுதான் தமிழக தேர்தல் களத்தின் தற்போதைய நிலைமை.

இதுவரை நடைபெற்ற தேர்தலுக்கும் இந்த தேர்தலுக்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையேயான இடைவெளி இருக்கிறது. அ.தி.மு.க. தன்னந்தனியாக தேர்தலை சந்திக்கிறது. தி.மு.கவோ ஏற்புடைய கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி கண்டு கை கோர்த்துச் செல்கிறது. ஆனால், பா.ஜ.கவோ முரண்பட்ட கட்சிகளுடன் கூட்டணி வைத்துள்ளது. ஒரு கட்சியை இன்னொரு கட்சி விழுங்கி விடும் என்ற மனப்போக்கில்தான் அந்தக் கூட்டணியில் உள்ள கட்சித் தலைவர்கள் அனைவருமே இருக்கிறார்கள். பா.ஜ.கவிற்கு ம.தி.மு.கவின் தனி ஈழம் பிடிக்கவில்லை. டாக்டர் ராமதாஸுக்கு வன்னியர் வாக்கு வங்கியை வசீகரம் செய்த விஜயகாந்தின் போக்கு பிடிக்கவில்லை. விஜயகாந்துக்கோ தன்னை நடிகர் என்று சித்தரித்த டாக்டர் ராமதாஸைப் பிடிக்கவில்லை. இதுதான் பா.ஜ.க. கூட்டணியில் தலைவர்களின் பங்களிப்பு. இவைகள் அனைத்துமே கூட்டணிகள் என்பதைவிட ஒன்றுக்கு மற்றொன்று மாற்றணி என்பதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

தி.மு.கவிற்கு கலைஞர் கருணாநிதி, ஸ்டாலின் ஸ்டார் பிரசார நாயகர்கள். அ.தி.மு.கவிற்கு முதலமைச்சர் ஜெயலலிதா மட்டுமே பிரசார நாயகர். ஆனால், பா.ஜ.கவிலோ வைகோ, விஜயகாந்த், டாக்டர் ராமதாஸ், டாக்டர் அன்புமணி ராமதாஸ், பிரேமலதா விஜயகாந்த் ஆகிய அனைவருமே ஸ்டார் அந்தஸ்துள்ள பிரசார நாயகர்கள். இவர்களில் யாருடைய பிரசாரமும் வாக்காளர்களை கவர்ந்து இழுத்துவிடவில்லை என்பது தான் இப்போது நிலவும் நிலைமை. காரணம் வாக்காளர்கள் இந்த தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை ஏற்கனவே முடிவு செய்துவிட்டு மௌனப்புரட்சி செய்து கொண்டிருப்பது போலவே தெரிகிறது. கூட்டங்களில் மக்கள் தென்படுவதில்லை. இளைஞர்களை காண முடியவில்லை. ஏன் பெண்களைக் கூட அழைத்துவந்து அமர வைக்கும் கட்சிக் கூட்டங்கள்தான் அதிகம் நடக்கிறது. இந்த அடிப்படையில் பார்த்தால் வாக்காளர்கள் பார்வையில் இது ஒரு வித்தியாசமான தேர்தல்.

தேர்தலில் வெற்றி பெற்றுச் செல்வதால் தமிழகத்திற்கு என்ன இலாபம் என்பதை வாக்காளர்கள் நிச்சயம் எடை போடுகிறார்கள் என்பதே இன்றைய நிலைமை. நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதில் அனைவருமே ஆர்வமாக இருக்கிறார்கள். அதே மாதிரி உறுதியான தலைமை இந்தியாவிற்கு கிடைக்க வேண்டும் என்பதிலும் அக்கறையுடன் இருக்கிறார்கள். தமிழகத்தில் அப்படியொரு இமேஜ் உள்ள நரேந்திர மோடிக்கு வாக்காளர்கள் குறிப்பாக இளம் வாக்காளர்கள் மத்தியில் இருந்தது. ஆனால், காலப் போக்கில் நரேந்திரமோடியின் பிரசாரங்கள் திசை மாறுகின்றன. வளர்ச்சி நாயகனாக காட்டப்பட்ட மோடி இன்று வம்பு நாயகனாகப் பேச ஆரம்பித்திருக்கிறார். அவர் உத்திரபிரதேச மாநிலம் வாரணாசி தொகுதியில் போட்டியிடப் போகிறேன் என்று அறிவித்த உடனேயே அவர் வளர்ச்சியை விட இந்துத்துவாவை அதிகம் நம்புகிறார் என்பது வெட்ட வெளிச்சமாகியது. அடுத்து பசுவதை பற்றி பேசுகிறார். சோனியா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களை ஒரு பிரதமர் வேட்பாளர் என்ற தகுதிக்கும் கீழே போய் விமர்சிக்கிறார். பா.ஜ.கவிற்குள் உள்ள அத்தனை சீனியர் லீடர்களையும் ஓரம் கட்டியிருக்கிறார்.

உதாரணமாக பா.ஜ.கவின் முகமாக கருதப்பட்ட முரளி மனோகர் ஜோசி, அத்வானி, ஜஸ்வந்த் சிங், சுஸ்மா சுவராஜ், யஷ்வந்த் சின்கா உள்ளிட்ட பல தலைவர்கள் இன்று இருக்கும் இடம் தெரியவில்லை. ஏற்கனவே போட்டியிட்ட தொகுதியில் அத்வானி போட்டியிடுவதற்குள் அவருக்கே சவாலாகிவிட்டது. இப்படி மோடியின் ஒவ்வொரு சமீப கால பேச்சுக்களும், நடவடிக்கைகளும் பா.ஜ.கவிற்குள் மோடி என்பதை விட மோடிக்குள் பா.ஜ.க. என்ற இமேஜை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த லேட்டஸ்ட் குழப்பம் வாக்காளர்களை கொஞ்சம் திணற வைத்துள்ளது என்பதே உண்மை. மோடிதான் இந்த நாட்டின் சாய்ஸ் என்று இருந்த வாக்காளர்கள் மத்தியில் இவரை விட்டால் வேறு யாரும் இல்லையா என்று யோசிக்க வைத்துள்ளது. இதுவே மோடிக்கு ஒரு சறுக்கல்தான். பீஹாரில் ராம்விலாஸ் பாஸ்வானும், ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவும் மட்டும்தான் இப்போது பா.ஜ.க. பக்கம் மோடி தலைமையை நம்பி வந்துள்ள முக்கிய பிற கட்சித் தலைவர்கள். ஆனால், இவர்கள் கூட நாளைக்கே பா.ஜ.கவிற்குள் அத்வானியா மோடியா என்ற கேள்வி பிறந்தால், அத்வானி பக்கம் நிற்கக் கூடியவர்கள்தான் என்பதை மறப்பதற்கில்லை.

நரேந்திர மோடியை எண்ணவோட்டத்தின் மாற்றம் இப்படியிருக்க பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கை வெளியீடும் வில்லங்கம் ஆகியிருக்கிறது. ஒரு தேசிய கட்சி நாட்டின் முதற்கட்டத் தேர்தல் நடக்கப் போகும் தினத்தில் தங்களது தேர்தல் அறிக்கையை வெளியிடுகிறது. வாஜ்பாய் இருந்தபோது தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு என்று தனி செயற்றிட்டம் அறிவிக்கப்பட்டது. பா.ஜ.கவிற்கு என்று தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. முன்னது கூட்டணிக் கட்சிகளின் உணர்வுகளையும் பின்னது பா.ஜ.கவின் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் விதத்தில் இருந்தது. ஆனால், இந்த தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயற்றிட்டம் என்று இதுவரை வெளியிடப்படவில்லை. ஆனால், பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகளின் உணர்வுகள் பிரதிபலிக்க வாய்ப்பில்லை. இதுவும் மோடிக்கு இளம் வாக்காளர்கள் மற்றும் மாற்றம் வேண்டும் என்று நினைத்த வாக்காளர்கள் மத்தியில் ஒரு பின்னடைவை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் ஆலோசித்து முடிவு எடுப்பதையே அருவருப்பாக பார்ப்பது போல் இருக்கிறது மோடியின் பேச்சு என்ற குற்றச்சாட்டு அனைத்து மட்டத்திலும் கிளம்பியிருக்கிறது. குறிப்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஆலோசனை கேட்டால் அவர் கமிட்டி போடுகிறேன் என்பார் என்று மோடி பேசியது எல்லாம் நடுநிலையாளர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுத்தரவில்லை. ஆலோசிப்பதே தவறு என்று பேசுவது எப்படி ஒரு நல்ல நிர்வாகத்திற்கு அடையாளமாக இருக்க முடியும் என்ற கருத்து மோடியின் மீது இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதற்கு எல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல் ஆர்.எஸ்.எஸ். தான் எனக்கு வழி காட்டி என்று மோடி பேசிய பிறகு அவர் மீது இருந்த வளர்ச்சி நாயகன் இமேஜ் விலகிக் கொண்டது. ஆர்.எஸ்.எஸ். நாயகன் என்ற இமேஜ்தான் இப்போது முன்னுக்கு நிற்கிறது. இது காங்கிரசிற்கு மாற்றாக ஏற்றுக் கொள்ள வேண்டிய கூற்று அல்ல என்ற தோற்றத்தை வேகமாக உருவாக்கி வருகிறது.

பல பத்திரிகைகளில் இப்போது கட்டுரையாளர்கள் மோடியை விமர்சிக்கத் தொடங்கி விட்டார்கள். ஒரு காலத்தில் தலையில் தூக்கிக் கொண்டு ஆட்டம் போட்டவர்கள் இப்போது அவரை தோளுக்கு இறக்கிக் கொண்டுவந்து விட்டார்கள். மோடியின் பேச்சுக்கள் இப்படியே தொடருமானால், தோளில் இருக்கும் மோடியையே இறக்கிவிட்டுப் போய் விடும் ஆபத்து தான் ஏற்பட்டிருக்கிறது. தேர்தலின் துவக்கத்தில் தன்னை வளர்ச்சி நாயகன் என்ற சொல்லுக்கு மட்டுமே உரியவன் என்று மோடி முன்னிலைப்படுத்திக் கொண்டார். இப்போது ஆர்.எஸ். எஸ்.ஸின் உதவி தேர்தலில் கிடைக்காது என்று நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை. பா.ஜ.கவின் அடிப்படைக் கொள்கைகளை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக நழுவிச் சென்று கொண்டிருக்கிறார் மோடி. குஜராத் [illegible] வளர்ச்சி நாயகன் என்ற போர்வையால் மறைத்த மோடியின் ஆதரவாளர்களால் தேர்தல் நெருங்க நெருங்க அந்தப் பணியை செம்மையாகச் செய்ய முடியவில்லை. குறிப்பாக உத்திரபிரதேசத்தில், பழிக்குப் பழி வாங்க பா.ஜ.கவிற்கு வாக்களியுங்கள் என்று மோடியின் நண்பர் அமித் ஷா பேசியதையே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பேசியதுடன் ஒப்பிட்டு வக்காலத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு பா.ஜ.க. வந்துவிட்டது. இதை வாக்காளர்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழக வாக்காளர்களும் இதையெல்லாம் கவனிக்கத் தவறவில்லை.

அகில இந்திய அளவில் மோடியின் மாற்றம் இப்படியென்றால் தமிழக கோணத்தில் பார்த்தால் இங்கு இப்போது தேர்தல் களத்தில் காங்கிரஸ் மற்றும் தி.மு.க. மீது சுமத்தப்படும் பல குற்றச்சாட்டுக்களில் இலங்கை தமிழர் பிரச்சினையும் ஒன்று. அப்பிரச்சினையில் இதுவரை பா.ஜ.க. எந்த ஆக்கபூர்வமான கருத்தையும் சொல்லவில்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் மீது குற்றப்பத்திரிகை வெளியிட்டிருக்கிறது பா.ஜ.க.. அதில் கூட சீனாவின் அத்துமீறல்கள், பாகிஸ்தானின் அத்துமீறல்கள் எல்லாவற்றையும் சொன்ன பா.ஜ.க. இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அத்துமீறல்கள் பற்றி வாய் திறக்கவில்லை. இலங்கை தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறலை விசாரிக்க வேண்டும் என்ற அமெரிக்க தீர்மானத்தை புறக்கணித்த இந்தியா பற்றி பா.ஜ.க. அகில இந்தியத் தலைவர்கள் கப்சிப் என்று இருக்கிறார்கள். தமிழக மீனவர் பிரச்சினை உள்ளிட்ட அனைத்து இலங்கை தமிழர் பிரச்சினையிலும் இதுவரை நரேந்திரமோடியிடமிருந்து காங்கிரஸுக்கு மாற்றாக புதிய கொள்கைப்பாடு ஏதும் அறிவிக்கப்படவில்லை. அதனால் தமிழக வாக்காளர்கள் இலங்கை தமிழர்கள் பிரச்சினையை மனதில் வைத்து வாக்களித்தால் கூட அதை வரவேற்கும் விதத்தில் மோடியின் கருத்துக்கள் இதுவரை வெளிவரவில்லை என்பது அந்த அணிக்கே சற்று சிக்கலான விடயம்தான்.

மோடியின் இமேஜ் பெரிய மாற்றத்தை இந்த இடைப்பட்ட காலத்தில் கண்டிருக்கிறது. அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவர் என்ற நிலையை அவரே மாற்றிக் கொண்டு வருகிறார். என்னை இந்துத்துவா வாக்காளர்கள் மட்டும் ஏற்றுக் கொண்டால் போதும் என்ற சிந்தனையோட்டத்துடன் சிறகடித்துப் பறந்து வருகிறார். காலம் காலமாக இதுபோன்ற பிரச்சினைகளுக்கு இடம் தராத தமிழக மண்ணில் மோடியின் இந்துத்துவா மோகம் எந்த அளவிற்கு அவருக்கு வெற்றிக்கனியைப் பறித்துக் கொடுக்கப் போகிறது என்பது மிகப்பெரும் கேள்விக்குறியாக மாறி நிற்கிறது. அதேபோல் மோடியை முன்னிறுத்தி களத்தில் நிற்கும் வைகோ, டாக்டர் ராமதாஸ், விஜயகாந்த் போன்ற தலைவர்கள் எல்லாம் இந்த விளக்கத்தை எப்படி மக்களுக்கு அளிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களும் ஒரு வேளை இந்துத்துவா தலைவர்களாகவே தேர்தல் காலத்திற்காக மாறிவிடப் போகிறார்களா என்பதும் புரியவில்லை. பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தேசிய முற்போக்கு திராவிட கழகம் அனைத்துமே முஸ்லிம் வேட்பாளர்கள் யாரையும் நிறுத்தவில்லை. இந்தக் கட்சிகள் சார்பில் போட்டியிடும் 29 வேட்பாளர்களில் ஒருவர் கூட முஸ்லிம் இல்லை என்பதைப் பார்த்தால் மோடியின் இந்துத்துவாக் கொள்கைக்கு சிவப்புக் கம்பளம் விரித்து விட்டார்கள் இந்த தலைவர்களும் என்பது தான் அரசியல் பார்வையாளர்களின் கருத்தாக இருக்கிறது.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் வறுமை நிலை தொடர்கின்றது

## பிரிட்டன் அமைச்சர் அலன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை வறுமை உட்பட்ட பல்வேறு அபிவிருத்திகளை கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், தமிழர்கள் வாழும பகுதிகளில் அந்த வளர்ச்சி காணப்படவில்லை என்றும் குறிப்பாக வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இன்னும் வறுமை ஒழிக்கப்படவில்லை என்று பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தி துறை அமைச்சர் அலன் டன்கன் தெரி வித்துள்ளார்.

தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், இலங்கையின வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர், இலங்கை மிலேனியம் இலக்குகளை அடைந்துள்ளதாக கூறுகின்ற போதும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் அதிக வறிய நிலைமை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தப்பகுதிகளில் இனத்துவ அடிப்படையில் வறுமை நிலை தொடர்பான தகவல் தம்மிடம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# மத்திய வங்கியின் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு மத்திய வங்கியின் அறிக்கையை மத்திய வங்கியின் ஆளுநர் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார்.

ஜனாதிபதி அமைச்சரவைக்கு அதனை சமர்ப்பித்த பின்னர் சகல பாராளுமன்ற உறுப்பினரகளுக்கும கையளிக்கப்படும் என சபை முதலவர் அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த 9 ஆம் திகதி ரவி கருணாநாயக்க எம்பி .ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பியபடி மத்திய வங்கியின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில் இதுவரை எம். பிக்குளுக்கு வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இதற்கு பிரதி அமைச்சர் அமுனுகம வெளிநாடு சென்றுவிட்டதாக சபையில் அறிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா, இந்த வாரம் அமைச்சரவை கூடவில்லை.

அடுத்தவாரம் அமைச்சரவை கூடியவுடன் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மத்திய வங்கியின் அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பார். அதன் பின்னர் பாராளுமன்றத்தில் சகலருக்கும் கிடைக்க வழிவகை செய்வோம் என்றார்.

எனினும் மத்திய வங்கியின் அறிக்கை வெளியிடப்பட்டு விட்டதே என ரவி கருணாநாயக்க எம். பி. கேட்டார்.

நிதியமைச்சர் என்ற வகையில் தான் மத்திய வங்கியின் ஆளுநர் ஜனாதிபதிக்கு மத்திய வங்கியின் அறிக்கையை கையளித்துள்ளார். ஜனாதிபதி அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பார் என்றும் கூறினார்.(2)

# அரசாங்கம் புலி பூச்சாண்டி காட்டி உல்லாச துறையை முடக்க முயற்சி

## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு



கடந்த மூன்று தசாப்த காலம் உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சியடைந்திருந்த நிலை மாறி தற்போது வளர்ந்து வருகின்ற நிலையில் அரசாங்கம் மீண்டும் புலி பூச்சாண்டி காட்டி உல்லாசப்பயணத்துறையை முடக்க நினைப்பது யானை தானே தன் தலையில் மண்வாரிப்போட்ட கதைபோல் ஆகிவிடும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமானது 16 புலம்பெயர் அமைப்புக்களையும் அது சார்ந்த ஆதரவாளர்கள் 424 பேரையும் தடை செய்திருப்பதாக தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கிடையில் இராணுவத்தளபதி வடகிழக்கில் 65 பேரை கைது செய்துள்ளோம். மீண்டும் விடுதலை புலி அமைப்பு தோற்றம் பெற்று வருகிறது என்று கூறுகிறார்.

இதுபோன்ற விடயங்கள் வெளிநாடுகளிலிருந்து வருகின்ற உல்லாசப் பயணிகளின் வருகையை தடை செய்யும். இதனால் அரசாங்கம் பாரிய விளைவுகளையும் சந்திக்க நேரிடும் என்றார். (2)

# சர்வதேச விசாரணையை இலங்கை மக்கள் ஏற்கவில்லை

## எல்.எம்.டி. ஆய்வு கூறுகிறது

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவை நடத்தவுள்ள சர்வதேச விசாரணை தொடர்பில் இலங்கை மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையில்டி.என்.எஸ்.லங்கா என்ற அமைப்பு நாடளாவிய ரீதியில் நடத்தும் எல்.எம்.டி. ஆய்வின்படி இலங்கையின் மனிதவுரிமை பிரச்சினை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைத்துள்ள சர்வதேச விசாரணை, ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று பெரும்பாலான மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எல்.எம்.டியின் ஏப்ரல் மாத அறிக்கையின்படி, இலங்கை தமது மனிதவுரிமை பிரச்சினைகளை தாமே தீர்த்துக்கொள்ளும். அதற்கு வெளியக தலையீடு அவசியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வில் பங்கேற்ற 95 வீதமானோர் இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதிகாரம் மிக்க நாடுகள் இலங்கை தொடர்பில் இரட்டை கொள்கையைகடைப்பிடிப்பதாகவும் அவர்கள குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகள் தமது நாடுகளில் மனிதவுரிமை மீறல்களை மேற்கொண்டு வருவதாக ஆய்வில் பங்கேற்றவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் எல்.எம்.டி. ஆய்வு குறிப்பாக வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டதா? என்ற விடயம் குறிப்பிடப்படவில்லை. (2)

# மதுபானம் அருந்தும் நாடுகளில் இலங்கைக்கு 4 ஆவது இடம்

உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் நபர்கள் இருக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காம் இடத்தை வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் அதிகளவில் மதுபானம அருந்தும் பிரஜைகளைக் கொண்ட நாடுகளின் வரிசையில் செக்குடியரசு முதலாம் இடத்தை வகிக்கின்றது.

இலங்கையைச் சேர்ந்த பிரஜைகள் அதிகளவில் மதுபானம் அருந்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக இலங்கையில் மதுபான உற்பத்தியின் அளவும் உயர்வடைந்துள்ளது.

போதைப் பொருளுக்கு முற்றுப்புள்ளி என்ற அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு புறம்பான வகையில் மதுபான பயன்பாடு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# இன்று ஒரு தகவல்

## தமிழ்த் தாத்தா

1887 ஆம் ஆண்டு, ஆவணி மாதம் ஒரு முக்கியமான நாள். ஆவணி அவிட்டம் கும்பகோணம் கல்லூரியிலே ஒருவாரம் விடுமுறை.

அந்த விடுமுறையை பயனுள்ள வகையிலே செலவு செய்ய ஒருவர் நினைத்தார்.

திருநெல்வேலிப் பக்கம் போய், பழைய ஏட்டுச்சுவடிகள் தேடலாம் என்று நினைத்தார் அவர்.

திருநெல்வேலிப் பகுதியிலே பரம்பரை வித்துவான் வீடுகளிலே "பத்துப்பாட்டு" ஏடுகளைத் தேடலாம் என்று முடிவு செய்தார்.

அவரின் அப்பாவோ, "சிராவணத்துக்கு இங்கே இருக்க வேண்டாமா? இந்த நேரத்திலே வெளியூருக்கு போக வேண்டுமா?" என்றார்.

ஆனால் இவரோ, அதைவிட பத்துப்பாட்டுத் தான் முக்கியம் என்று நினைத்தார். அப்பாவிடம் ஏதோ சமாதானம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். ஒரு ஒற்றை மாட்டுவண்டியிலேறி புகையிரத நிலையத்துக்கு போனார். பாதி வழியிலே வண்டில் குடை சாயுது! இவர் கீழே விழுகிறார்! இவர் மேலே தகரப்பெட்டி விழுகிறது! இதற்காக அவர் பயணத்தை நிறுத்தவில்லை.

புகையிரதத்தில் ஏறினார். புகையிரதம் புறப்பட்டது. தஞ்சாவூர் தாண்டிப் போகும்போது, அப்போது திடீரென்று பாதிவழியிலே அதுவும் நின்றது. இவர் " என்ன விடயம் " என்று எட்டிப்பார்த்தார்.

ஒரு அதிகாரி வேகமாக வந்து, " கீழே இறங்கி வேறு பெட்டியிலே ஏறுங்கள் " என்றார். முன்னே இருந்த பெட்டியிலே தீப்பிடித்து விட்டதாம். அதற்குத் தான் அப்படி சொல்லியிருக்கிறார்.

இவர் கீழே இறங்கி வேறு பெட்டியிலே உட்கார்ந்தார். ஒரு வழியாக புகையிரதம் திருநெல்வேலிக்குப் போய்ச் சேர்ந்தது.

இப்படி விடாப்பிடியாக இருந்து தமிழ் இலக்கியங்களை நமக்குத் தேடித்தந்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யார்? நமது தமிழ்த்தாத்தாதான். உ.வே.சாமிநாத ஐயர்.

நாமாக இருந்தால் ஒற்றை மாட்டுவண்டி குடைசாய்ந்த போதே " நேரம் சரியில்லை" என்று சொல்லி வீட்டுக்குத் திரும்பியிருப்போம்.

கும்பகோணம் கல்லூரியிலே ஒருநாள், 1900 ஆம் ஆண்டு மேமாதம் இரண்டாம் திகதி இளம்கலை மாணவர்களுக்கு இவர் தமிழ்ப்பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

அப்போது ஒரு மாணவன் எழுந்து இவரிடம் சொல்கிறான், "ஐயா, எங்கள் விடுதிக்கு ஒருவர் வந்திருக்கிறார். முன்பு வசதியாக வாழ்ந்தவர். இப்போது வறுமையிலே இருக்கிறார். கடன் சுமை அதிகம்.

பெரிய துணி மூட்டை ஒன்று வைத்திருக்கிறார். அதிலே பழைய தமிழ்ச்சுவடிகள் நிறைய உள்ளது. நூறு சுவடிகளுக்கு மேல் இருக்கும்.

அவ்வளவையும் அன்பளிப்பாக கொடுப்பதற்கு வந்திருக்கிறார். அவர் "தனக்கு பணம் எதுவும் வேண்டாம்! அவற்றைப் பாதுகாத்தால் போதும்! என்கிறார்" என்று அந்த மாணவன் கூறினார்.

தமிழ்த் தாத்தாவிற்கு தாங்கமுடியாத மகிழ்ச்சி. உடனே நேரில் சென்று வாங்க நினைத்தார்.

ஆனால் அந்த மாணவன் தானே போய் அந்த சுவடிக் கட்டுக்களை எடுத்து வந்து தன் ஆசிரியரிடம் கொடுத்தார்.

சுவடி தந்த அந்தப் பெரியவரை பார்க்காமல் இருந்தால் அது பெரிய பாவம் என்று சொல்லி, உடனே விடுதிக்குப் போனார் உ.வே.சா!.

ஆனால் அதற்குள் அந்தப் பெரியவர் தன்னுடைய பெயரையோ, ஊரையோ யாரிடமும் சொல்லாமலேயே போய்விட்டார்.

அவரை பார்க்க முடியவில்லை என்று தமிழ்த்தாத்தாவுக்கு பெரிய மனவருத்தம்.

அது யார்? என்ற விபரம் யாருக்குமே தெரியாமலேயே போய் விட்டது.

ஆனால் அந்த சுவடியை வாங்கி வந்து கொடுத்த மாணவன் பெயர் ''சாம்பசிவ செட்டியார்'' என்று உ.வே.சா. சொல்லியிருக்கிறார்.

"தமிழ் விடு தூது" அந்த சுவடிக் கட்டிலே தான் இருந்ததாம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேச சபையின் இரண்டு சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 10 இலட்சத்து 87 ஆயிரம் ரூபா வருமான நிதியினூடாக சந்தைகள் புனரமைக்கப்பட்டதுடன் ஒரு சந்தை புதிதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டம் கடந்த காலம் போரினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களூடாக முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

இதற்கமைய கரைதுறைபற்று பிரதேச சபையினரால் கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்திற்கு முதன் முதலாக புதிய சந்தை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் முள்ளியவளை பொதுச் சந்தை புனரமைக்கப்பட்ட நிலையில் கடந்த 9 ஆம் திகதி புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் 2012 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியேறிய நிலையில் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்களுக்கென பொதுச் சந்தையொன்று இல்லாமையினால் இக்கிராம மக்கள் முள்ளியவளை, வற்றாப்பளை பொதுச் சந்தைகளையே பயன்படுத்தி வந்தனர்.

இம்மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா வருமான நிதி செலவில் புதிய சந்தையொன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

அத்தோடு, முள்ளியவளைப் பொதுச் சந்தை யுத்தத்தினால் மிகவும் சேதமடைந்திருந்த நிலையிலும் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட 2010 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வந்தது.

இப் பொதுச்சந்தையை முள்ளியவளை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி, புதறிகுடா ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், பிரதேச சபையினர் வருமான நிதியிலிருந்து 4 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா செலவில் அச் சந்தையை புனரமைப்பு செய்து வழங்கியுள்ளனர். (9-267)

# மக்களுக்கான 4 இலட்சம் ரூபாவை வங்கி முகாமையாளர் கையாடல்

(மல்லாவி)

முல்லை. மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு பண முத்திரை கொடுப்பனவிற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 4 இலட்சத்திற்கு மேற்பட்ட நிதி சமுர்த்தி வங்கி முகாமையாளரால் கையாடல் செய்யப்பட்டமை முல்லை. மாவட்ட செயலகத்தின் கணக்காய்வு பிரிவு மேற்கொண்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறிய மக்களுக்கு பணமுத்திரை கொடுப்பனவு செய்வதற்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 4 இலட்சம் ரூபா நிதியை சமுர்த்தி வங்கி முகாமையாளர் வங்கியிலிருந்து பணத்தை எடுத்துள்ளார்.

எனினும் மக்கள் தமக்கான பணத்தினை பெறச்சென்ற வேளை இன்னும் பணம் கிடைக்கவில்லையெனக் கூறி அவர்களை திருப்பி அனுப்பியுள்ளார்.

இவ்விடயத்தில் சந்தேகம் கொண்ட மக்கள் உரிய தரப்பினருக்கு அறிவித்ததையடுத்து குறித்த வங்கி முகாமையாளர் உடனடியாக முல்லை. மாவட்ட செயலகத்திற்கு அழைக்கப்பட்டதுடன் அவர் தொடர்பான கணக்குகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போது வங்கியிலிருந்து பணத்தை எடுத்த விடயம் வெளியாகியது.

இந்நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு வழங்கப்படுகின்ற பொது உதவிகளை ஒரு சில அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்வது கண்டிக்கத்தக்க விடயமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து தவறிழைத்த தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இல்லை யேல் பொறுப்புணர்வுடன் செயற்படும் அரச உத்தியோகத்தர்கள் மீதும் அவநம்பிக்கையேற்படும்சூழல்உருவாகலாமென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (9-15)

# மன்னாருக்கான அரச பேருந்து சேவை கடந்த வாரம் முதல் விஸ்தரிப்பு

(பூநகரி)

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கான அரச பேருந்து சேவைகள் கடந்த வாரம் முதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பல வருடங்களாக யாழ்சாலையிலிருந்து மன்னாருக்கான அரச பேருந்து சேவை மிகக் குறைவாகவே இடம்பெற்று வந்த அதேவேளை தனியார் பேருந்து சேவை மிகச் சிறப்பாகவே நடைபெற்று வந்தது.

அரச பேருந்து சேவை இடம்பெறாமையால் அரச அதிகாரிகளும் பொது மக்களும் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கி வந்தனர்.

எனவே, அரச பேருந்து சேவையை விஸ்தரிக்குமாறு இவர்களினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்டு வந்தது.


இந்நிலையில், கடந்தவாரம் முதல் இப் பேருந்து சேவை 5 தடவைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி யாழ்சாலையிலிருந்து அதிகாலை 5.45, காலை 10 மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 4 மணி, பிற்பகல் 5.30 மணி என்ற ஒழுங்குமுறையில் இச் சேவை இடம்பெற்று வருகின்றது.

இப்பேருந்து யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி முழங்காவிலூடாக மன்னாரை சென்றடைகின்றது.

இதனால், அரச உத்தியோகத்தர்களுடன் ஏனைய பயணிகளும் கூடவே இப் பேருந்து சேவையை நெருக்கடி இன்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-84)

# நீர்க்குழாய்கள் வழங்கப்பட்டும் வடிகான் புனரமைப்பு தாமதம்



(சிவநகர்)

உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் சேதமடைந்த வடிகான்கள் புனரமைப்பு வேலைகளுக்காக வழங்கப்பட்ட நீர்க்குழாய்கள் ஒருவருடமாக பயன்படுத்தப்படாமல் அவ்விடத்திலேயே போடப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியிலுள்ள சேதமடைந்த வடிகான்களைப் புனரமைப்பதற்காக பீப்பிள் இன்னேட் என்ற அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் நீர்க்குழாய்கள் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

எனினும் அந்நீர்க்குழாய்களை பொருத்துவதற்குரிய பணமின்மையால் அவை ஒருவருடமாக வீதியோரங்களில் போடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.




நிதியின்மை காரணமாக இக்குழாய்கள் வீதியோரங்களில் போடப்பட்டுள்ளது தொடர்பில் பிரதேச மட்ட ஒருங்கிணைப்பு கூட்டங்களிலோ அல்லது ஏனைய அபிவிருத்தி நடவடிக்கை பற்றிய கூட்டங்களிலோ சுட்டிக்காட்டப்படுவதில்லையெனவும் கிராமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதில் எவரும் அக்கறை செலுத்தவில்லையெனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போதும் வடிகான்கள் சேதமடைந்து காணப்படுவதனால் மழை காலங்களில் நீர் சீரான முறையில் வழிந்தோட முடியாமல் வீதிகளை ஊடறுத்து செல்லும் நிலை தோன்றியுள்ளது.

எனவே, வழங்கப்பட்ட நீர்க்குழாய்களை உரிய இடங்களில் பொருத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-254)

# வவுனியாவில் தொடர் திருட்டுச் சம்பவங்கள்

(பூந்தோட்டம்)

வவுனியாவில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, கடந்த திங்கட்கிழமை இரவு மன்னாரில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்த மீன் வியாபாரிகள் இருவர் பூந்தோட்டம் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டியை திருடிச் சென்றுள்ளனர்.

இந் நிலையில் பாரவூர்தியில் துவிச்சக்கரவண்டியை ஏற்றிச் சென்ற போது, பூந்தோட்டப் பொலிஸாரினால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அத்தோடு கொரவப்பத்தானை வீதியிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையமொன்றில் புகுந்த திருடர்கள் 37 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியான பொருட்களை சூறையாடிச் சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கற்பகபுரம் பகுதியிலுள்ள வீடொன்றிற்குச் சென்ற நால்வர் 6 இலட்சத்திற்கும் அதிகமான நகை மற்றும் பணத்தினை சூறையாட்டிச் சென்றுள்ளனர்.


இவ்வாறாக ஏப்ரல் மாதத்திற்குள் மூன்று திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இவற்றை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனவும் வவுனியா பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது. (9-250)

# கவிதை நூல் அறிமுக விழா

(வவுனியா)

வவுனியா தமிழ் மாமன்றத்தினரால் நெற்கொழுதாசன் எழுதிய இரகசியத்தின் நாக்குகள் கவிதை நூல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வவுனியா இந்திரன்ஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் மாமன்றத் தலைவர் இரா. இராஜேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நூல் நயத்தை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் நடார்த்தீபன், கவிநயத்தை வைத்திய கலாநிதி செ.மதுரகன், நன்றியுரையினை தமிழ் மாமன்ற இணைச் செயலாளர் சி.நிலக்ஷன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (9-23)



தர்மபுரம் மகாவித்தியாலயத்திற்கு மகிந்தோதய திட்டத்தினூடாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. ஆய்வு கூடத்தினை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமார் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி திறந்து வைப்பதையும் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தினை மாணவர்கள் பயன்படுத்துவதையும் ஆய்வு கூடத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலகப் போரில் களமாடிய இராணுவ வீரர் கிளிநொச்சியில் மரணம்

(கொழும்பு)

இரண்டாம் உலகப் போரில் போராடிய இலங்கையைச் சேர்ந்த இராணுவ வீரர் அமிர்தலிங்கம்-குமாரசாமி கடந்த 9ஆம் திகதி தனது 97ஆவது வயதில் அக்கராயனில் காலமானார்.

1916 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி அன்று மயிலிட்டியில் பிறந்த இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

1936ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் இராணுவ த்தில இணைந்து இத்தாலியில்உலகமகா யுத்தத்தில் பங்கு கொண்டு 1946ஆம ஆண்டு நாடு திரும்பியே இராணுவத்திலிருந்து விலகினார்.

அப்போதைய காலத்தில் யாழ். குடாநாட்டில் வசித்ததோடு இராணுவத்தில் இருந்து விலகி தபால் நிலையத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றதோடு முதுமைக் காலத்தில் அக்கராயன் பகுதியில் வசித்து வந்தார். இவரின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. (2)

# பலூன்கள் இறக்குமதி

தமிழ் - சிங்கள புதுவருட காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்வதற்காக 60 ஆயிரம் பலூன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சாரதிகள் மது போதையில் வாகனம் செலுத்துகிறார்களா என்று பரிசோதிப்பதற்காகவே இந்த பலூன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இப பலூன்கள் பொலிஸ் திணைக்களத்தினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதேவேளை குடிபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யவென நேற்று தொடக்கம் விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு நேற்று காலை 6 மணி தொடக்கம் நாட்டில் அனைத்து பொலிஸ் நிலைய பகுதிகளிலும் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் 20ஆம் திகதி வரை இத்திட்டம் 24 மணிநேரமும் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



## திருமதி கேதீஸ்வரன் சீதாலட்சுமி

கிளிநொச்சி பூநகரி வாடியடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கேதீஸ்வரன் சீதாலட்சுமி கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு Maison Funeraire 7, Boulevard de Menilmontant,75011 Paris France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி பத்மநாதன் கமலாதேவி

சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையத்தடியைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் கமலாதேவி கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு 55, Rue Gince, St. Laurent, Montreal, QC H4N 1J7, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## சரவணை கனகேஸ்வரன்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Lunen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை கனகேஸ்வரன் கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Bestattungshaus Kirchhof Merten, Altstadtstr 19-21, Luenen 44534, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



## கார்த்திகேசு கந்தசாமி

பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா Etobicoke ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தசாமி கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு St. John's Dixie Cemetery & Crematorium, 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி கதிரேசநாதன் குணபூசணம்

சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மருதானையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசநாதன் குணபூசணம் கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# சவுதியில் இலங்கை பெண் மீது பாலியல் துன்புறுத்தல்

சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் புரிந்து வந்த இலங்கைப் பெண்ணை பால்யல் ரீதியாக துன்புறுத்திய சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சவுதியில் இலங்கைப் பெண் தொழில் புரிந்து வந்த வீட்டு எஜமான பாலியல் ரீதியாக துன்புறுத்தியமை தொடர்பான சம்பவம் குறித்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சவுதியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டமையை அடுத்து, இலங்கைப் பெண் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், சத்திர சிகிச்சை மூலம் அவரது உடலில் இருந்து மூன்று சட்டைப் பின்கள் எடுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து இலங்கைப் பெண் பணிபுரிந்த வீட்டு எஜமான் மற்றும் அவரது இரண்டு பெண் பிள்ளைகளிடம் சவுதி பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக அங்குள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (2)

# மணவாளக்கோலவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் மணவாளக்கோல விழா எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகத்திற்கான கிரியைகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

மாலை 6 மணிக்கு விசேட பூஜையைத்தொடர்ந்து பிள்ளையார் பூந்தண்டிகையில் வெளிவீதி வலம் வரும் திருக்கோலக்காட்சி இடம்பெறும். (2)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி அருள்மிகு முருகன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சங்காபிஷேகமும் மாலை 6 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெற்று தொடந்து திருவூஞ்சல் இடம் பெறவுள்ளது. (2)

# புலி முக்கியஸ்தர்கள் எனக் கருதப்படும் நபர்களின் புகைப்படங்கள் எங்கள் வசம்

## பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் என கருதப்படுகின்ற நபர்களின் புகைப்படங்கள் யாழ். பொலிஸாரிடமும் வழங்கப்பட்டுள்ளன.

அப்புகைப்படங்களில் உள்ளவர்களை இராணுவத்துடன் இணைந்து பொலிசார் தேடி வருவதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி. விமலசேன தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் என கருதப்படுவோர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினால் தேடப்பட்டு வருகின்றனர்.

இத் தேடுதல் நடவடிக்கையில் பொலிஸாரும் ஈடுபட்டுள்ள னரா? திடீர் தேடுதல் நடவடிக்கைகளினால் பொது மக்கள் அசௌகரியங்களிற்குள்ளாக்கப்பட்டுகின்றனரே!என யாழ் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை 10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் வினா தொடுக்கப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் என கருதப்படுகின்ற நபர்களை பொலிஸார் தேடவில்லை. பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரும் இராணுவத்தினரும் இணைந்தே தேடி வருகின்றனர். எனினும் பொ்லிஸார் குறித்த நபர்களை கண்டால் கைது செய்வார்கள்.

அந்த வகையில் அந்நபர்க ளின் புகைப்படங்களுடன் பொலிஸா ரும் இராணுவத்துடன் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் வாகனங்களில் செல்வோர் இடைமறிக்கப்பட்டு சோதனைக் குட்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் பாதிக்கப்படலாம். ஆனல்அதற்குஒன்றும்செய்ய முடியாது. பொலிஸார் இவ்வாறான தேடுதல் நடவடிக்கைக்கு உதவி புரிகின்றனரே தவிர விசாரணைகளை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரே மேற்கொண்டு வருகின்றனர் என அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (2-4)

# சூழலுக்கு பாதகமான எதையும் நாம் அறிமுகம் செய்யக்கூடாது

## வடமாகாண அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

இயற்கை வளங்களை பாதுகாக்கக் கூடிய விவசாய முறை எமக்கு உகந்தது. மண்ணை, நீரை, வளியை மாசுபடுத்தாத இயற்கை விவசாய முறைகள் மனித குலத்திற்கு மிகவும் பயனுள்ளவை என்று சொண்ட் நிறுவனத்தின் புதிய விவசாய முறையிலான பண்ணை ஒன்றை ஆரம்பித்து வைத்து உரை யாற்றிய போது வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இரசாயனங்கள் பாவிக்கும் மரக்கறிகளை உட்கொள்ளுகின்ற மனிதர்களுக்கு பல்வகை நோய்கள் ஏற்படுகின்றன. அதேவேளை நிலமும் நீரும் மாசடைகின்றன. இரசாயனங்களை வீசுவதால் வளியும் மாசடைகின்றது. இதன் மூலமாக நீண்ட கால நோக்கில் எமது மனித குலம் வாழ்வதற்கு ஒவ்வாத சூழல் உருவாகிக்கொண்டு வருகிறது. இதன் மூலம் மனித குலம் பாதிப்படைகிறது.

நீரை நாம் சேமிக்க வேண்டிய கட்டாய நிலையில் இருக்கின்றோம். விவசாயத்தில் இயற்கை பசளைகளை பாவிப்பதன் மூலமாக செழிப்பான விவசாயத்தைச் செய்ய முடியும். எமது விவசாய முறைகள் மாற்றப் பட வேண்டும்.

காலத்திற்கேற்ப பொருத்தமான முறைகள் அறிமுகஞ்செய்ய வேண்டும். விவசாயிகளுடைய வருமானம அதிகரிக்கப்பட வேண்டும்.

அதி கூடிய விளைச்சலை தரக் கூடிய விவசாய முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதே வேளையல் சூழலுக்கு பாதகமான எதையும் நாம் அறிமுகஞ் செய்யக் கூடாது என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்பு கின்றேன் என்றும் தெரிவிததார்

இந்நிகழ்வில் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய பீட மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், விவசாயத் துறை நிபுணர்கள் சமூகமளித்திருந்தார்கள். அவர்களுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன் முறையாக வாழைச் செய்கைக்கு சொண்ட் நிறுவன அனுசரணையுடன் சேதன சான்றிதழ் வழங்கும் ஸ்ரீசெட் நிறுவனமும் கொழும்பிலிருந்து வருகை தந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பண்ணை ஆரம்ப வைபவத்தை தொடர்ந்து ஏற்கனவே ஆய்வுக்குட்படுத்தப்பட்ட வாழை செய்கையாளர்களிடம் வாழை செய்கை முறை பற்றிய பரிசோதனைகளை மேற்கொண்டு முதல் தடைவையாக யாழ்ப்பாணத்திலுள்ள வாழை செய்கையாளர் சிலருக்கு சேதன சான்றிதழ் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள்.

சொண்ட் நிறுவனமானது கிழக்கு மாகாணத்தில் இதேபோன்று ஒரு பண்ணையை உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மிக விரைவில் வடமராட்சியிலும் மிக பெரியளவில் இத்தகைய பண்ணை ஒன்று உருவாக்கி இதன் மூலம் விவசாயிகளுக்கு நடைமுறை ரீதியான பயிற்சியை வழங்குவதற்கு இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிலாரி மீது ஷூ வீச்சு



அவுஸ்திரேலிய கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஹிலாரி கிளிண்டன் மீது ஷூ வீச்சு இடம் பெற்றுள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளிண்டன், அவரது மனைவி ஹிலாரி கிளிண்டன். இவர தற்போதைய ஜனாதிபதி ஒபாமா மந்திரி சபையில் வெளியுறவு துறை அமைச்சராக இருந்தார்.

தற்போது அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றி வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் லாஸ்வேகாஸ் நகரில் நடந்த ஒரு நிறுவன விழாவில் பங்கேற்று பேசிக் கொண்டிருந்தார்.

அதில், ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கூடி இருந்தனர். அப்போது அவரை நோக்கி யாரோ ஒருவர் 'ஷூ'வை வீசி எறிந்தார். தன்னை நோக்கி அது பறந்து வந்ததை பார்த்த ஹிலாரி புத்திசாலித்தனமாக குனிந்து கொண்டார்.

எனவே, அந்த 'ஷூ' அவர் மீது விழவில்லை. கறுப்பு மற்றும் ஓரேஞ்ச் நிறத்தில் இது இருந்தது. 'ஷூ'வுடன் சேர்த்து சில பேப்பர்கள் பந்து போல் சுருட்டப்பட்டு வீசப்பட்டன.

இதற்கிடையே, 'ஷூ' வீசி விட்டு பின்பக்க வரிசையில் இருந்து ஒரு பெண் அவசரமாக வெளியேறினார். எனவே, அவரை அங்கு பாதுகாப்புக்கு நின்ற பொலிஸார் பிடித்து கைது செய்தனர்.

அவர் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே தன் மீது 'ஷூ' வீசப்பட்டதை ஹிலாரி கிளிண்டன் சர்வ சாதாரணமாக எடுத்து கொண்டார்.

'ஷூ' வீசிய பிறகும் தொடர்ந்து பேசிய அவர். "யாரோ என் மீது ஏதோ வீசினார்கள். கழிவுகள் எதையும் வீசவில்லை. அது எனது நல்ல நேரம் என்று தான் சொல்ல வேண்டும். அவர் என்மீது 'சாப்ட் பால்' போன்று எதையும் வீசி விளையாடவில்லை ஜோக் அடித்தார்.

# மாயமான விமானம் பற்றிய தகவல் விரைவில் தெரியவரும்

## அவுஸ்திரேலிய பிரதமர் நம்பிக்கை

(பேர்த்)

காணமற்போன விமானத்திலுள்ள கறுப்பு பெட்டியில் இருந்து சமிக்ஞைகள் இருமுறை கிடைத்துள்ளன. இச் சமிக்ஞைகள் காணமற்போன மலேசிய விமானத்தின் கறுப்பு பெட்டியில் இருந்துதான் வந்திருக்க வேண்டும் என அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகருக்கு வடமேற்கில் 2,280 கி.மீ. பகுதியை மையப்பகுதியாகக்கொண்டு, 57 ஆயிரத்து 923 சதுர கி.மீ. பரப்பளவில் தேடுதல் வேட்டை நடைபெறுவதாகவும் டோனி அபோட் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குறுகிய பிரதேசத்தில் மாயமான விமானத்தை தேடும் பணியில் 10 இராணுவ விமானங்கள், 4 பயணிகள் விமானங்கள், 13 கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

எனவே ஒருசில தினங்களில் இந்த தேடுதல் வேட்டை முடிவுக்கு வரும், விமானத்தின் கதி உலகுக்கு தெரிய வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விமானம்மாயமானபோதுவிமானி அறையில் நடந்தது என்ன, என்ன பேசப்பட்டது என்பதை அறிவதற்காக, அவற்றை பதிவு செய்து வைத்துள்ள கறுப்பு பெட்டியை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

கறுப்பு பெட்டியில் இருந்து வருகிற ஒலியைக்கேட்டு, அது இருக்கிற இடத்தைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியில் ஓஸன் ஷீல்டு எனும் அவுஸ்திரேலிய போர்க்கப்பலும், 'எச்.எம்.எஸ். எக்கோ' எனும் பிரிட்டனின் நீர்நிலப்பரப்பு ஆய்வு கப்பலும் ஈடுபட்டு வருகின்றன.

அப்போது மாயமான விமானத்தின் கறுப்பு பெட்டியில் இருந்து வெளியானது என கருதப்படுகிற 'பிங்' சமிக்ஞைகள் கடந்த 5 ஆம் திகதி 2 முறை கிடைத்தது என அவர் குறிப்பிட்டார்.

# செயற்கைக்கோளை விண்ணில் ஏவி இஸ்ரேல் சாதனை

(ஜெருசலேம்)


இஸ்ரேல் புதிய உளவு செயற்கைகோளை விண்ணில் ஏவி, புவியின் சுற்று வட்டப்பாதையில் நிறுத்தி சாதனை படைத்துள்ளதாக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் இந்த புதிய உளவு செயற்கைகோளை, ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தீவிரவாத குழுக்களை கண்காணிக்க பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

இஸ்ரேல் அரசுக்கு சொந்தமான வான்வெளி தொழிற்றுறை நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட புதிய உளவு செயற்கைகோளான ஓபெக்-10 நேற்றுமுன்தினம் இரவு விண்ணில் செலுத்தப்பட்டது.

ஏற்கனவே, அந்த செயற்கைக் கோள் தகவல் மற்றும் படங்களை அனுப்ப தொடங்கிவிட்ட நிலையில் இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் முழுமையான செயற்பாட்டிற்கு



வரவுள்ளது.

ஈரான் மற்றும் அதன் பிராந்திய நாடுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவே இந்த செயற்கை கோள் பயன்படுத்தப்படுகிறது.

இந்த இலகுரக செயற்கைக் கோள், நாளின் எந்த நேரத்திலும், எவ்விதமான வானிலை சூழ்நிலையிலும் கூர்மையான படங்களை எடுத்து அனுப்பும் திறன் பெற்றது.

இதனால்இஸ்ரேல்நாட்டின்உளவு திறன்கள் மேம்படுத்தப்படும்.

மற்ற சாதாரண செயற்கைக் கோள்களை விட, படமெடுக்கும் ரேடாரை திசை திருப்பி ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி குறிவைத்து இயக்கும் திறன் கொண்டது.

# நேபாள பாராளுமன்றில் மன்னிப்பு மசோதா அறிமுகம்

நேபாளத்தில்உள்நாட்டுப்போரின் போது போர்க்குற்றத்தில் ஈடுபட்ட மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு பொதுமன்னிப்பு அளிப்பதற்கான மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டவர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நேபாள காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் லெகாக் கூறுகையில்,

பாலியல் பலாத்காரம் தவிர ஏனைய குற்றங்களில் ஈடுபட்ட மாவோ யிஸ்டுகள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு பொது மன்னிப்பு வழங்க ஆணையம் அமைக்கப்படும். அது தீவிரமாக ஆராய்ந்து பொதுமன்னிப்பு வழங்கும் என அவர் கூறினார்.

நேபாளத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப்போரில் சுமார் 16 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது நினைவு கூரத்தக்கது.

# பப்புவா நியூகினியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(சிட்னி)

பப்புவா நியூகினியாவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் தீவு முழுவதும் குலுங்கியது. 7.3 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்ட போதிலும், பசுபிக் கடலில் சுனாமி எச்சரிக்கை ஏதும் இல்லை என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பாகன்வில்லி தீவின் காங்குணா நகரின் அருகில் கடலுக்கு அடியில் 54 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. அருகில் உள்ள சாலமன்தீவு வரை இதன் தாக்கம் இருந்தது. இதில் பாதிப்பு இருக்கும் என அவுஸ்திரேலிய புவியியல் மைய அதிகாரி டேவிட் ஜெப்சன் தெரிவித்தார்.

இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று ஹவாலியை மையமாகக் கொண்ட பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது. ஆனால், சுனாமி ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று ஜெப்சன் எச்சரித்துள்ளார்.

# மத்திய ஆபிரிக்க குடியரசிற்கு அமைதிப்படைகள் அனுப்பிவைப்பு

மத்திய ஆபிரிக்க குடியரசுக்கு அமைதிப்படைவீரர்களை அனுப்ப ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம் எடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் மத்திய ஆபிரிக்க பகுதியில் உள்ள டெகொவா நகரத்தில் நடைபெற்ற சண்டையில் குறைந்தது 30 பேர் பலியானதாகவும், 10 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு 12 ஆயிரம் அமைதிப்படை வீரர்களை அனுப்ப ஐ.நா. பாதுகாப்பு சபை முடிவு செய்துள்ளது.

இதற்கான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அங்கு நடைபெற்று வரும் வன்முறைகளை இன சமய அழிப்பு என்று எச்சரித்துள்ள ஐ.நா செயலர் பான் கீ மூன் ஐ.நாவின் அமைதிப் படை வீரர்களுடன் பிரான்ஸ் நாட்டிலிருந்தும் 2 ஆயிரம் வீரர்களை அதிகபடியாக அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே வலுவான ஆபிரிக்க ஒன்றியத்தின் 6 ஆயிரம் வீரர்களுடன் 2 ஆயிரம் பிரான்ஸ் வீரர்கள் பிரான்சின் முன்னாள் காலனியான மத்திய ஆபிரிக்கக் குடியரசின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வரும் செப்டெம்பர் மாதம் ஐ.நா வீரர்களால் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)



சீனா சென்ற கிழக்கு தைமூர் பிரதமர் ஷானானா குஸ்மாவோ பீஜிங்கில் சீன ஜனாதிபதி ஷின் ஜின் பிங்கை (வலது) சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# ஈராக்கில் கார்க்குண்டு தாக்குதல்கள்; 34 பேர் உயிரிழப்பு, 91 பேர் காயம்!

(பக்தாத்)

ஈராக்கில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 34 பேர் பலியாகினர். 91 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் 'ஷியா' பிரிவினர் வாழும் பகுதிகளில் தீவிரவாதிகள் கார்க்குண்டு தாக்குதல்களை நடத்தினர். தலைநகர் பக்தாத்தில் இருந்து 80 கி.மீற்றர் தூரத்தில் உள்ள நுமானியா நகரில் வர்த்தக நிறுவனங்கள் நிறைந்த பகுதியில் கார்க் குண்டு வெடித்தது.

அதில் 5 பேர் பலியாகினர். 17 பேர் காயம் அடைந்தனர். அதே போன்று பக்தாத் நகரிலும், அதன் அருகேயுள்ள காமியா பகுதியிலும் கார்க் குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அங்கு 9 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயம் அடைந்தனர்.

அதேபோன்று ஷாப், ஷம்மையா, கர்ராடா, மாமில், சதார்நகரம் உள்ளிட்ட பகுதிகளிலும் கார் குண்டுகள் வெடித்தன. அவற்றில் 13 பேர் இறந்தனர். 42 பேர் காயம் அடைந்தனர்.

மேலும் பக்தாத்தின் ஜதிரியாவில் வர்த்தக நிறுவனங்கள் நிறைந்த பகுதியிலும் மற்றொரு கார்க் குண்டு வெடித்தது. அதில் 3 பேர் கொல்லப்பட்டனர். 8 பேர் காயம் அடைந்தனர். ஷபா அல்போர் என்ற இடத்தில் குண்டுகள் வீசப்பட்டன. அதில் 4 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயம் அடைந்தனர்.

ஒருநாள் நடந்த தாக்குதலில் மட்டும் 34 பேர் பலியாகி உள்ளனர். 91 பேர் காயம் அடைந்துள்ளனர். இத்தாக்குதல்கள் மூலம் தீவிரவாதிகள் போர் அறிவிப்பை பகிரங்கமாக வெளியிட்டுள்ளனர் என ஈராக் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடன் பழகினாலும் அந்தஸ்து பார்க்காமல் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் உள்ளன்பு குறையாமல் பழகுங்கள்.

– ரீடர்ஸ் டைஜஸ்ட்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு

திருவள்ளுவர் சுட்டி நிற்காத கருத்துக்கள் எவையும் இல்லை என்று சொல்லும் அளவில் திருக்குறள் உலகப் பெருமை பெற்றது.

மனித வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று யாரேனும் கேட்டால் வள்ளுவர் தந்த வாக்கின்படி என்று கூறும் அளவில் திருக்குறள் உலகப் பொது மறையாகத் துலங்குகிறது.

திருவள்ளுவப் பெருமான் தந்தருளிய திருக்குறள் தமிழ் மொழியில் அமைந்தது குறித்து தமிழர்களாகிய நாம் பெருமையடையவேண்டும். இருந்தும் இப்போதெல்லாம் திருக்குறளை மனனம் செய்வது, அதன் பொருள் உணர்ந்து கொள்வது என்பன மருவிப் போயிற்று.

போட்டிகளுக்காக மட்டும் அவசர அவசரமாகத் திருக்குறளை மனனம் செய்வது, அதனைப் போட்டியில் ஒப்புவிப்பது என்ற கருமத்துடன் திருக்குறள் போய்விடுகிறது. இப்போதெல்லாம் எமது பிள்ளைகளை பேஸ்புக் எனப்படும் முகப் புத்தகம் தனக்குள் மடக்கி வைத்திருக்கின்றது.

விடிந்தால் பொழுதுபட்டால் பேஸ்புக்கில் முகத்தைப் புதைப்பது ஒரு பெரும் போதையாக மாறியுள்ளது.

போதாக்குறைக்கு பேஸ்புக்கில் காதல் செய்து கவிதை வரைந்து கண்ணும் கண்ணும் நோக்காமலே மணவறையில் குந்தியிருந்து தாலிகட்டி குடும்பம் நடத்தி இடைநடுவில் நீதிமன்றம் சென்று ஐயா! விவாகரத்துத் தாருங்கள் என்று கேட்கும் அளவில் நிலமை மாறிவிட்டது. சுருங்கக் கூறின் வாழ்க்கையைத் தொலைக்கும் அளவில் பேஸ்புக் விவகாரம் எங்கள் பிள்ளைகளைச் சீரழிக்கின்றது எனலாம்.

பேஸ்புக்கில் நேரத்தைச் செலவிடுவதால் கற்றல் என்பது தொலைந்து போகிறது. அது மட்டுமன்றி வீட்டில் தாய், தந்தை, சகோதரங்கள் என்ற குடும்ப உறவில் மகிழ்வில்லை. கூடியிருந்து கதைப்பதுவுமில்லை. கணனிக்கு முன் குந்தியிருந்து; தானே தனித்து ரசித்து – சிரித்து ஒரு மாயையில் மிதந்து, போதை உட்கொண்டார்போல் இருப்பதைப் பார்க்கும் போது நெஞ்சு வெடித்து விடும்.

இதற்கு அப்பால் முகப் புத்தகத்தில் கிடைக்கும் நட்பின் நிலைமை படுமோசம்.

கண்டதும் கிடைத்ததும் நட்பு என்றால் வாழ்வு என்னாவது? இங்குதான் வள்ளுவரை அழைக்க வேண்டியுள்ளது.

பேஸ்புக் என்ற கொடுங்கலாசார நட்பு மனித சமூகத்தை அழிக்கும் என்று வள்ளுவர் நினைத்தன் காரணமாகவோ என்னவோ முக நக நட்பது நட்பன்று எனக் குறிப்பிட்டார். வள்ளுவரின் குறளுரைக்குப் புதிதாகப் பொருள் கூறினால், முகப் புத்தகத்தில் (பேஸ்புக்) கிடைக்கின்ற நட்பெல்லாம் நட்பல்ல. உண்மை நட்பென்பது நெஞ்சத்தால் – உள்ளத்தால் ஏற்படுவதே நட்பு என்பதாகும். எனவே அன்புக்குரிய பிள்ளைகளே! பேஸ்புக் கலாசாரத்தில் உங்களை முழுமையாகப் புதைக்காமல், அதிலிருந்து நட்புக்களைத் தேடாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உண்மையான நட்பைத் தேட திருக்குறளைப் படியுங்கள். வள்ளுவர் உங்களுக்கு நல்ல நண்பர்களைக் காட்டித் தருவார்.

அந்த நண்பர்கள் உடுக்கை இழந்தவன் கை போல் ஆங்கே இடுக்கண் களைபவர்களாக இருப்பர்.

# மத்திய அரசு செய்ய நினைப்பதை மாகாண அரசால் தடுக்க முடியாது

## இரணைமடு குடிநீர்திட்ட ஆலோசகர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் அதிகாரங்கள் அனைத்தும் ஒரு இடத்தில் குவிந்து கிடக்கின்றது. இந்நிலையில் மத்திய அரசாங்கம் செய்ய நினைப்பதை மாகாணசபை தடுத்து நிறுத்த முடியாது என்பதை புரிந்து கொள்ளவேண்டும் என்று இரணைமடுக் குளத்திலிருந்து குழாய் மூலம் யாழ். குடாநாட்டிற்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தின் ஆலோசகரும் பேராசிரியருமான என். நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் யாழிலுள்ள மேற்படி சபையின் அலுவலகத்தில் இடம்பெற்ற இரணைமடுகுளத்திலிருந்து யாழிற்கு குடிநீர் கொண்டு வரும் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின் போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு வரும் திட்டம் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சாட்டியுள்ளதோடு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேற்படிதிட்டத்தை நடைமுறைப்படுத்தினால் பாதகமான விளைவுகள் ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தத்திட்டதை மாகாண அரசு தடுத்தாலும் மத்திய அரசு நடைமுறைப்படுத்தும் என்று தேசிய நீர்வழங்கல் அதிகாரசபையினர் கூறியுள்ளனர். அப்படியாயின் கிளிநொச்சியைச் சேர்ந்த விவசாயிகள் எதிர்த்தாலும் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுமா என்று ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பேராசிரியர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் அதிகாரங்கள் அனைத்தும் ஒரு இடத்தில் குவிந்து கிடக்கின்றது. அதிகாரத்திலுள்ளவர்களுக்கு இவ்வாறான திட்டங்களை அமுல்படுத்துவது கடினமல்ல, இந்நிலையில் மத்திய அரசாங்கம் செய்ய நினைப்பதை மாகாண சபையால் தடுத்து நிறுத்த முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடி நீர் கொண்டு வர வேண்டிய தன் அவசியம் குறித்தும் இத் திட்டத்தைக் கொண்டு வருகின்ற வழிமுறைகள் மற்றும் இதனால் ஏற்படுகின்ற நன்மைகள் தொடர்பிலும் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளினால் இங்கு விளக்கமளிக்கப்பட்டது. இதன்மூலம் இத்திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியினால் வடக்கு மாகாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமைகள் இன்று இல்லாத நிலையில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக தற்பொழுது அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கை வளங்கள் அழிக்கப் பட்டுள்ளமையினால் மழை பெய்யாத நிலையே இருக்கின்றது.

இதனால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்ற அதே வேளையில் இந்த மக்கள் மேலும் பாதிக்கப்படாத வகையில் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஊடகவியலாளர்களினால் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் இத்திட்டத்தை பலரும் ஆதரித்திருந்ததாகவும் தற்பொழுதே குழப்புவதாகவும் இதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளும் ஆதரித்துள்ளதாகவும் இதனை சிலரே எதிர்ப்பதாகவும் சுட்டிக காட்டியிருந்தனர். இந்நிலையில் தற்போது இத்திட்டம் அரசியல் மயப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# வர்த்தக நிலையத்தை உடைத்து பொருட்கள் பல திருட்டு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிலையம் ஒன்றினை உடைத்து உள்நுழைந்த திருடர்களால் அங்கிருந்த பொருட்கள் பல களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கைவேலி 1ஆம் வட்டாரத்திலுள்ள பலசரக்கு கடையொன்றில் இடம்பெற்றுள்ளது.

கடையில் முன்கதவுப் பூட்டுக்களை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த அங்கர் பெட்டிகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், டீசல், தே. எண்ணெய் போத்தல்கள் உட்பட பல பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதில் சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை பொருள் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு வியாபார நிலையத்தை பூட்டிச் சென்ற உரிமையாளர் மறுநாள் அதிகாலை 4 மணிக்கு வியாபார நிலையத்தை திறக்க வந்தபோதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

உடனடியாக சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தெரிவிககப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் கைரேகை தடயங்களை சேகரித்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர். (செ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



எத்தனையோ வழிகளைக் கடைப்பிடித்தும் மனிதனின் பிரச்சினைகள் அப்படியே உள்ளன. பல புத்தகங்கள் படித்தோம். உபதேசங்கள் கேட்டோம். கோபத்தை அடக்க நினைத்தோம். ஆனால் எதிலும் பலன் இல்லை.

எல்லாச் சண்டைகளுக்கும் காரணம் அன்பின்மைதான். அன்பு எவருக்கும் இருதயத்தில் இல்லை. அதனால் எல்லோரும் இந்தச் சண்டையை நிறுத்த Diplomatic Relationship என்ற ஒரு வழியை சொல்கிறார்கள்.

ஆகவே எல்லாவற்றிற்கும் அடிப்படையான காரணம் அன்பு இல்லை என்பதுதான்.

மனிதன் தன் அனைத்துப் பிறவிகளிலும் செல்வத்தைத் தேடுகிறானே தவிர, ஒரு பிறவியிலாவது மனிதனைதான் நேசிக்க முயற்சிப்பதில்லை.

அன்பான வாழ்க்கை (Life of Love),வாழ்க்கையே அன்பு (Love of Life) இதற்காகத்தான் இருதயத்தில் ஏங்கிக்கொண்டிருக்கின்றோம்.

நம் ஒவ்வொரு செயலும் அன்பில்லாத மனநிலையிலிருந்து ஊற்றெடுக்கிறது.

அதனால் நமக்கு ஒரேவழி நம் உறவுமுறையைச் சீர்படுத்திக்கொள்வதே.

நீங்கள் ஒன்றே ஒன்று செய்து கொடுங்கள். குறைந்த பட்சம் மாற வேண்டும் என்ற ஆசையாவது வைத்துக்கொள்ளுங்கள். மாறாவிட்டாலும் பரவாயில்லை மாறவேண்டும் என்ற விழிப்புணர்ச்சி வரவேண்டும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### மன அமைதியுடன் வாழுங்கள்




- நல்லவனாக இருந்து மற்றவர்களுக்கு இயன்ற நன்மைகளைச் செய்து வருவதே ஆன்மிக வாழ்வின் அடிப்படை நெறிமுறை.
- பகை, பொறாமை போன்ற தீயகுணங்களை வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிடும்.
- பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்துவதே சமயத்தின் நோக்கம்.
- எந்தக் காலத்திற்கும் தியாகம் தான் வாழ்விற்குரிய விதியாக இருக்கப் போகிறது.
- மன அமைதி பெற்று வாழ்வது தான் மதங்களின் அடிப்படை லட்சியம். மதத்தின் பெயரால் மனிதன் சச்சரவு செய்வது கூடாது.
- இந்த உலகம் ஒரு பெரிய உடற்பயிற்சிக்கூடம். அதில் நம்மை வலிமையுடையவர்களாக்கவே நாம் வந்திருக்கிறோம்.
- தெய்வீகத்தன்மை இல்லாத மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதனை கீழ்நிலைக்குத் தள்ளிவிடும் சக்தி படைத்தவை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வைகரன் அபாரம்

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III ஜொலிஸ்ரார் காலிறுதிக்கு தெரிவு



***ஜொலிஸ்ரார் அணிக்கும் நியூஸ்ரார் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.***

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப் போட்டிக்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் முதலாவது சுற்றில் 5 ஆவது போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி, நியூஸ்ரார் அணியை 8 இலக்குகளால் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 25.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் உமாகாந் 12, கஜேந்திரா 14, ரம்மியராகுலன் 16, மோகன் 25, சயந்தன் 14 ஓட்டங்களை பெற்றனர்.

ஜொலிஸ்ரார் அணியை சேர்ந்த வைகரன் 7 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 2 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 இலக்குகளை கைப்பற்றினார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான சுற்றுப்போட்டியில் சாதனையாக அமைகின்றது.

120 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 19.2 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களை பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் சிவலக்சன் 26, சந்திரவதனன் 23, பார்த்தீபன் ஆட்டமிழக்காது 45 சஜீவன் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களை பெற்றனர். நியூஸ்ரார் அணியை சார்ந்த ரம்மியராகுலன் 2 இலக்குகளை கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார் அணி, பற்றீசியன் - யாழ்.பல்கலைக் கழக போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் 3 ஆவது காலிறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.


இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணி தெரிவுக்கு ஜொலிஸ்ரார் அணி 8.05 புள்ளிகளையும் நியூஸ்ரார் அணி 1.39 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (கு)


# வலயமட்ட சதுரங்க சுற்றுப் போட்டி; அருணோதயக் கல்லூரி சம்பியன்





15 வயதுப்பிரிவு





19 வயதுப்பிரிவு

வலிகாமக் கல்வி வலயப் பாடசாலைகளுக் கிடையே கடந்த 4, 5 ஆம் திகதிகளில் 15,19 வயதிற்குட்பட்ட ஆண், பெண் ஆகிய வயதுப் பிரிவுகளுக்கிடையே சதுரங்கப் போட்டிகள் இடம்பெற்றன. இப் பிரிவுகள் அனைத்திலும் அருணோதயக் கல்லூரி சம்பியனாகிச் சாதனை படைத்தது.


19 வயதுப் பெண்கள் பிரிவினர் இம் முறையுடன் தொடர்ந்து 5 ஆவது தடவையாகவும் சம்பியனாகிச் சாதனை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் அணியினர் எதிர் வரும் மாதத்தில் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

15 வயதுப் பிரிவு ஆண், பெண் அணியினரையும், 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணியினரையும் அதிபர், விளையாட்டு முதல்வர், பயிற்றுவித்த ஆசிரியர், அணிப் பொறுப்பாசிரியர், பிரதி அதிபர் ஆகியோரையும் படங்களில் காணலாம். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கொக்குவில் ஐக்கிய வி.கழகம் நடத்தும்

# மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி; கார்மேல் போய்ஸ் வெற்றி



கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான 6 பேர் 5 பந்துபரிமாற்றத்தினை கொண்ட மாபெரும் மென்பந்து சுற்று போட்டியின் இறுதிப்போட்டிக்கு குருநகர் கார்மேல்போய்ஸ் அணியானது முன்னேறியது.

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான 6 பேர் 5 பந்து பரிமாற்றத்தினை கொண்ட மாபெரும் மென்பந்து சுற்று போட்டியின் அரையிறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கலைவாணி மைதானத்தில் நடைபெற்றது.


இதில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியினை எதிர்த்து அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் மோதியது.

அரையிறுதியாட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாட குருநகர் கார்மேல்போய்ஸ் அணியினை அழைத்தது. குருநகர் கார்மேல்போய்ஸ் அணியானது அதிரடியாக ஆடி 5 பந்து பரிமாற்றத்தின் நிறைவில் 76 ஓட்டங்களை பெற்றது. இதில் அயன் ஏழு 6 ஓட்டங்கள் அடங்கலாக 44 ஓட்டங்களை பெற்றார், அணித்தலைவர் செல்டன் இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக 20 ஓட்டங்களையும் பெற்றார்.

77 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நோக்கத்துடன் களமிறங்கிய அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகம் 28 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. இதன் மூலம் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியானது இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் கலைவாணி மைதானத்தில் நடைபெறும். (கு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமைக்கா ஓட்டப்பந்தய வீரருக்கு போட்டித்தடை



ஜமைக்காவின் தடகள நட்சத்திர வீரரான அசபா பவெல் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கினார்.

இவர் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தின் முன்னாள் உலக சாதனையாளர்.

இவர் ஊக்கமருந்து உட்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் போட்டிகளில்பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.


கடந்த ஆண்டு ஜுன் மாதம் ஜமைக்காவில்நடந்த தேசிய போட்டியில் பங்கேற்றபோது சேகரிக்கப்பட்ட அவரது சிறுநீர் மற்றும் ரத்த மாதிரியின் பரிசோதனையில் 'ஆக்சிலோபிரோன்' என்ற ஊக்கமருந்து உட்கொண்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து ஜமைக்காவின் ஊக்கமருந்து தடுப்பு கமிஷன் விசாரணை நடத்தி தனது முடிவை நேற்று முன்தினம் அறிவித்தது.

இதன்படி 31 வயதான அசபா பவெலுக்கு ஒன்றரை ஆண்டுகள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஜுன் மாதத்தில் இருந்து அவருக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவரது தடைக்காலம் எதிர்வரும் டிசம்பர் 20-ம் திகதிவரை நீடிக்கும் (க)

# ஐ.பி.எல்லில் திறமையை நிரூபித்து தேசிய அணியில் இடம்பிடிப்பேன்

## ஷேவாக் நம்பிக்கை



ஐ.பி.எல்போட்டிகளில் எனது திறமையை நிரூபிப்பதன் மூலம்அணியில் இடம் பெறுவேன் என்று ஷேவாக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். 7-வது தொடர் போட்டி எதிர்வரும் 16-ம் திகதி அபுதாபியில் தொடங்குகிறது. இந்திய அணியில் சிறப்பாக விளையாடாத காரணத்தால் இந்திய அணியில் இருந்து ஷேவாக் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்.

இந்திய வீரர்வீரேந்தர்ஷேவாக்கை கிங்ஸ்லெவன்பஞ்சாப்அணி ஏலம் எடுத்துள்ளது. அவர் கடந்த ஐ.பி.எல். போட்டியில் டெல்லி அணியில் இடம் பெற்றிருந்தார்.

ஆனால் இந்த ஆண்டுக்கான ஏலத்தில் அவரை டெல்லி அணி கண்டு கொள்ளவில்லை. இதனால்கிங்ஸ்லெவன்அணிரூ.3.2 கோடிக்கு ஏலம்எடுத்துள்ளது. இது தொடர்பாக ஷேவாக்கூறியதாவது. கடந்த சீசனில் நான் சரியாக விளையாடவில்லை. இந்த சீசனில் நன்றாக விளையாடினால்தேசிய அணியில்மீண்டும்இடம்பெறவாய்ப்புஉருவாகும் இதனால் ஐ.பி.எல். போட்டியில் திறமையை நிரூபிக்க முயற்சிப்பேன்.

போட்டிகளில்தொடக்க வீரராக களம்இறங்கி உள்ளதால்பஞ்சாப் அணிக்கு தொடக்க வீரராக ஆடுவேன். பஞ்சாப் அணி நான் விரும்பினால் அணித்தலைவர் பதவியை ஏற்கலாம் என்று தெரிவித்தது.

ஆனால்நான் அணித்தலைவர் பதவிக்கு வேறு சில வீரர்களின்பெயரை பரிந்துரைத்தேன் என்றும் என்னை ஏலம் எடுத்த பஞ்சாப் அணிக்கு சிறந்த பங்களிப்பை தருவேன் எனவும் கூறியுள்ளார். (க)

# சங்கா, மஹேலவின் சர்ச்சையான ஓய்வுக்கு ரணதுங்கா ஆதரவு



சங்கக்கார. ஜெயவர்த்தன ஓய்வு விவகாரத்தில், அர்ஜுன ரணதுங்க தனது ஆதரவை இருவருக்கும் தெரிவித்துள்ளார்.

இருபது-20 உலகக்கிண்ண போட்டி வெற்றியுடன் இலங்கை கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்களான சங்கக்காரவும், மஹேல ஜெயவர்த்தனவும் சர்வதேச இருபது-20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றனர்.

இலங்கை அணியின் அடையாள வீரர்களான இருவரும் உலகக்கிண்ணம் முன்பாக தங்களது ஓய்வு பற்றிய அறிவிப்பை வெளியிட்டனர். இதுகுறித்து தங்களுக்கு முன்கூட்டியே முறைப்படி தகவல் தெரிவிக்கவில்லை என்று இலங்கை கிரிக்கெட் சபை குற்றம் சாட்டியது.


இதனால் வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பல சர்ச்சைகள் எழுந்தன.

இந்த விவகாரத்தில் இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க கருத்து தெரிவிக்கும்போது, மற்றவர்களை விட வீரர்களுக்குதான் ஓய்வு பற்றி சரியான முடிவை எடுக்கத் தெரியும்.

இருபது-20 கிரிக்கெட்என்பது இளைஞர்களுக்கான விளையாட்டு என்பதை கடந்த காலங்களில் பார்த்து இருக்கிறோம். எனவே அவர்கள் இருவரும் எடுத்த முடிவு சரியானதுதான்.

இருபது-20 உலகக் கிண்ணத்தில் இளம் வீரர்களும், மூத்த வீரர்களும் ஒருங்கிணைந்து தங்களது பங்களிப்பை அளித்தனர் என்றும்இளம்வீரர்கள்சிறப்பாக விளையாடி வருவது எதிர்கால இலங்கை அணிக்கு சிறப்பாக அமையும் எனவும் கூறியுள்ளார். (க)

# மீண்டும் களமிறங்குவேன் கெவின் பீட்டர்சன் நம்பிக்கை



இங்கிலாந்து அணியால் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையில் தான் டெஸ்ட் போட்டிகளில் விளையாட வாய்ப்பிருப்பதாக பீட்டர்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கு இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து கெவின் பீட்டர்சன் நிரந்தரமாக ஒதுக்கி வைக்கப்பட்டார். 'அவரால் அணிக்குள் ஒழுங்கீன செயல்கள் அதிகரிக்கின்றது, சுமூகமான சூழல் இல்லை என்பது தான் அவர் மீதான குற்றச்சாட்டுகளாக இருந்துள்ளது. இந்த காரணங்களால் இங்கிலாந்து அணியில் இருந்து தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டார்.

இதையடுத்து ஐ.பி.எல் கிரிக்கெட்டில் கவனம் செலுத்தி வந்த பீட்டர்சன், மீண்டும் இங்கிலாந்து டெஸ்ட் அணியில் விளையாட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் 104 டெஸ்டில் விளையாடி 8181 ஓட்டங்கள் எடுத்த பீட்டர்சன், டெஸ்ட் கிரிக்கெட்டில் நான் 10 ஆயிரம் ஓட்டங்களை எட்டுவதற்கு இன்னும் வாய்ப்பிருக்கிறது என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# தோனியின் வாக்குமூலத்தை பி.சி.சி.ஐக்கு வழங்க முடியாது

## உச்ச நீதிமன்றம்



ஐ.பி.எல்விவகார விசாரணையின்போது தோனிஅளித்த வாக்குமூலம்தொடர்பான காணொளி ஆதாரத்தை பி.சி.சி.ஐ.யிடம் அளிப்பதற்கு உச்சநீதி மன்றம் மறுத்துள்ளது. கடந்த ஐ.பி.எல் தொடரின் போது சூதாட்டம் நடந்ததாக எழுந்த புகாரை தொடர்ந்து உச்சநீதி மன்றத்தில்வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. ஓய்வுபெற்ற நீதிபதி முத்கல் தலைமையிலான குழு தோனி, சீனிவாசன் மற்றும் சுந்தர்ராமன் ஆகியோரிடம் விசாரணை நடத்தி, தனது அறிக்கையை தாக்கல் செய்தது.

இந்த அறிக்கையின்படி, பி.சி.சி.ஐ. தலைவர் பதவியிலிருந்து சீனிவாசன் ஒதுங்க நேரிட்டது. நேற்று உச்சநீதி மன்றத்தில் மீண்டும்விசாரணைக்கு வந்த வழக்கில் மூன்று பேரும்அளித்த வாக்குமூல காணொளிமற்றும்எழுத்துப்பூர்வ பிரதிகளை தங்களுக்கு தரவேண்டும் என்று பி.சி.சி.ஐ கோரிக்கை வைத்தது. இதனை விசாரித்த நீதிபதிகள் ஏ.கே பட்நாயக் மற்றும் ஜெ.எஸ்கேஹர் அடங்கிய குழு காணொளிஆதாரத்தை தர முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். இந்த வழக்கின் விசாரணை ஏப்ரல் 16-ம்திகதி நடைபெறும்என்றும்தேவைப்படும் பட்சத்தில் வழக்கு தொடர்பான ஆவணங்களை பி.சி.சி. ஐ.யிடம் ஒப்படைப்பது தொடர்பாக முடிவெடுக்கப்படும் எனவும் கூறியுள்ளனர். (க)

# "டிராவிட் என் ஹீரோ" ராஜஸ்தான் வீரர் சாம்சன்



ராஜஸ்தான்ரோயல்ஸ்அணியின்ஆலோசகராக ராகுல் டிராவிட் இருப்பது எங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சஞ்சு சாம்சன் கூறியுள்ளார்.

கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக விடைபெற்றுவிட்ட ராகுல் டிராவிட் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஆலோசகராக இருந்து வருகிறார்.

ரூ.4 கோடிக்கு வாங்கப்பட்ட அணியின் 19 வயதான சஞ்சு கூறுகையில், டிராவிட் எனது ஹீரோ. அவரின்கீழ்விளையாடுவதன் மூலம்எனது கனவு நனவானது. பல சமயங்களில் எனக்கு ஆதரவாக இருந்துள்ளார். டிராவிட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற நிலையிலும் அவரை நான் இழக்கவில்லை. அவரிடம்இருந்து நான்நிறைய விடயங்களை கற்றுள்ளேன். தொடர்ந்து அவரிடம் கற்றுக் கொள்ள முயற்சிப்பேன். அவர் அளித்த ஊக்கமே எனக்கு இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த உதவுகிறது.

மேலும் கடந்த ஐ.பி.எல் தொடரில் எங்கள் அணி வெற்றி பெற அவரது ஆலோசனைகள் உதவியது. அந்த போட்டியில் நான் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டேன். அதற்காக அவர் எனக்கு கிரிக்கெட் மட்டையை பரிசாக அளித்தார் என்றும் கனவு நாயகனிடம் இருந்து பரிசு பெற்றது என்னால் மறக்கவே முடியாது எனவும் கூறியுள்ளார். (க)





சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பாராட்டி நல்வாழ்த்து தெரிவிக்கின்றோம்

புதிய முயற்சியாக துவிச்சக்கர வண்டிப் பிரயாணத்தின் மூலம் இலங்கையின் பிரசித்தி பெற்ற சிவத்தலங்களைத் தரிசித்து தனது குறிக்கோளை நிறைவேற்றி அதன்மூலம் இறையாசிகளைக் பெற்றுக் கொண்ட எமது சங்கத்தின் மதிப்பிற்குரிய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும் துவிச்சக்கரவண்டி ஓட்ட வீரருமாகிய திரு.வைத்திலிங்கம் கைலைநாதன் அவர்களையும் அவருடன் இணைந்து செயற்பட்ட R.R.றட்ணசிங்கம் குணசேகர அவர்களையும் எமது சங்கம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்களும் பணியாளர்களும்
சங்கானை பல நோ.கூ. சங்கம் (வ-து)

(க-7004)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு-யாழ்.குடிநீர்திட்ட நிபுணர்குழு அறிக்கை கிடைக்கவில்லை

## தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி இரணைமடு குளத்திலிருந்து குழாய் மூலம் யாழ். குடாநாட்டுக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டம் தொடர்பில் ஆராய வடக்கு மாகாண முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவானது முதலமைச்சருடையது அல்ல என்றும் அது மாகாண விவசாய அமைச்சரின் குழுவே என்றும் சுட்டிக்காட்டியுள்ள தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை இவ்வாறு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இது வரையில் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவ்வாறு கிடைத்த பின்னரே தாம் இது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென்றும் தெரிவித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் யாழிலுள்ள மேற்படி சபையின் அலுவலகத்தில் இடம்பெற்ற இரணைமடு குளத்திலிருந்து யாழிற்கு குடிநீர் கொண்டுவரும் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த இத்திட்டத்தின் சமூகவியலாளர் ரி.பாலசுப்பிரமணியம் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியிலுள்ள இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற இந் நேரத்தில் இத்திட்டம் தொடர்பில் ஆராயும் வகையில் வடக்கு மாகாண சபையினால் நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்வாறு மாகாண சபையால் அமைக்கப்பட்ட குழுவானது வடக்கு மாகாண முதலமைச்சரின் குழுவல்ல. மாறாக மாகாண விவசாய அமைச்சரின் குழுவே அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட குழுவினர் பல தரப்பினர்களுடனும் ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறு வெளியிடப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையானது இதுவரையில் எமக்கு கிடைக்கவில்லை. இதனை யாரும் எம்மிடம் உத்தியோகபூர்வமாக வழங்கவில்லை.

இதனால் இரணைமடு குடிநீர் விநியோகத் திட்டம் தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

அத்தோடு இத்திட்டத்தை நிறுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபையினருக்கு எந்தவித அறிவித்தலும் இதுவரையில் விடுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நிபுணர் குழுவின் அறிக்கை இதுவரையிலும் தமக்கு கிடைக்கப் பெறாத நிலையில் இத்திட்டம் தொடர்பாக பலத்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரசியல் நோக்கத்திற்காக சிலர் இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்ப்பினை தெரிவித்து வருவதாகவும் யாழ்.குடாநாட்டிற்கான குடிநீர்த்தேவை அதிகரித்து வரும் நிலையில் மாற்றுத் திட்டம் குறித்து ஆராயாமல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குடிநீர்த் திட்டத்தை தடுக்க முற்படுகின்றனர் என்றும் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். (செ-6)

# வட மாகாண சபை உறுப்பினராக தவராசா நியமிக்கப்பட்டார்

(கொழும்பு)

வடக்கு மாகாண சபை உறுப்பினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சின்னத்துரை தவராசா நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினரொருவர் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக வட மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பாண்மையின் வெற்றிடமொன்று ஏற்பட்டுள் ளதாகவும் இதற்குப் பதிலாக 1988-ம் ஆண்டின் 2-ம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் படி 65 (1) ம் பிரிவின் கீழ் சின்னத்துரை தவராசாவை நியமித்திருப்பதாக 09.04.2014 இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் றெக்சியன் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவரும் எதிர்வரும் 17-ம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் 26-ம் திகதி நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் வீட்டில் இருந்து சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

இக்கொலைச் சந்தேகநபராக கமல் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையினாலேயே அவர் ஈபிடிபி கட்சியிலிருந்து கட்சித் தலைமையினால் நீக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (செ-11)

# மாயமான மலேசிய விமானம்
# 239 பயணிகளும் உயிருடன்?

## ரஷ்ய உளவுத்துறை திடுக்கிடும் தகவல்

(மாஸ்கோ)

மாயமான மலேசிய விமானம் ஆப்கனுக்கு கடத்தப்பட்டு தனி தனி பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் சென்ற 239 பயணிகளும் பிணைக் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று ரஷ்ய உளவுத் துறை திடுக்கிடும் தகவல் வெளியிட்டுள்ளது. இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங் சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் கடந்த மாதம் 8-ம் தேதி திடீரென காணாமல் போனது. அதில் 12 ஊழியர்கள் உட்பட 239 பயணிகள் இருந்தனர். தெற்கு சீன கடலுக்கு மேலே பறந்து கொண்டிருந்த போது விமானம் மாயமானது தெரிய வந்தது. விசாரணையில் விமானத்தின் தகவல் தொடர்பு சாதனங்கள் திட்டமிட்டு அணைக்கப்பட்டதும் இ விமானம் திசை மாறி சென்றதும் தெரிய வந்தது.

இந்நிலையில் ரஷ்ய உளவுத் துறையினர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது: மலேசிய விமானம் தீவிரவாதிகளால் திசை திருப்பப்பட்டு ஆப்கானிஸ்தானுக்கு கடத்தி செல்லப்பட்டுள்ளது. பாகிஸ்தான் எல்லையோரம் ஆப்கானிஸ்தான் பகுதியில் மலை பகுதிகள் நிறைந்த இடத்தில் விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது. அங்கு விமானத்தின் பாகங்கள் தனித் தனியாக பிரிக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரையும் 7 குழுக்களாக பிரித்து வேறு வேறு இடங்களில் அடைத்து வைத்துள்ளனர். மண் குடிசைகளில் எந்த தொலை தொடர்பு வசதியும் இல்லாத இடத்தில் பயணிகளை தீவிரவாதிகள் அடைத்து வைத்துள்ளனர். அவர்கள் உணவு தண்ணீர் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

மேலும் விமானத்தில் சென்றவர்களில் ஆசிய நாடுகளை சேர்ந்த பல்துறை நிபுணர்கள் 20 பேரை பாகிஸ்தான் எல்லையில் உள்ள பதுங்கு குழிகளில் தீவிரவாதிகள் பிணைக் கைதிகளாக அடைத்துள்ளனர்.

இவ்வாறு ரஷ்ய உளவு துறையினர் தெரிவித்துள்ளதாக டெய்லி ஸ்டார் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விமானம் மாயமாகி ஒரு மாதத்துக்கு மேல் ஆகும் நிலையில் விமான பயணிகள் உயிருடன் இருப்பதாக ரஷ்ய உளவு துறை கூறியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (செ-11)

## கோபி உட்பட மூவர்...

கிப் பிரயோகத்திலேயே கொல்லப்பட்டிருப்பதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களமும் உறுதி செய்திருக்கின்றது.

கொல்லப்பட்டவர்களில் மூன்றாவது நபர் அப்பன் என்றழைக்கப்படும் விடுதலைப்புலி சந்தேக நபர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழன் இரவு இடம்பெற்ற சம்பவத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக முன்னர் வெளியாகிய தகவல் தவறானது என்றும் அந்த இராணுவ சிப்பாய் வேறு ஓரிடத்தில் இடம்பெற்ற இராணுவ பயிற்சியின் போதே உயிரிழந்ததாக இப்போது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

விடுதலைப்புலிகளை மீண்டும் ஒன்றிணைக்கும் முயற்சியில் கோபி என்பவர் ஈடுபட்டிருந்ததாகவும் இவர் தன்னைத் தேடிச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவரை கிளிநொச்சி தர்மபுரம் பகுதியல் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தி காயப்படுத்திவிட்டு தப்பியோடியதாகவும் முன்னர் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

தேடப்பட்டு வந்த கோபிக்கு அடைக்கலம் கொடுத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் தர்மபுரம் பகுதியில் இந்த சூட்டுச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் பகுதியில் தனது வீட்டிலிருந்த ஜெயக்குமாரி என்ற பெண்ணும் அவருடைய 14 வயது மகளும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பயங்கரவாதச் செயலில் ஈடுபடுபவர்கள் அல்லது விடுதலைப் புலிகளை மீளவும் ஒன்றிணைக்க முயற்சிப்பவர்களுக்கு உதவிகள் வழங்கியதாகக் கூறி 65 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்திருந்தார்.

இவர்களில் 5 பேர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும், எஞ்சிய 60 பேரில் பத்துப் பேர் பெண்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வு நடைபெற்ற போது தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் ஒருங்கிணைய முயற்சிப்பதாகக் காட்டுவதற்கு இலங்கை அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சமூகப்...

தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் இன்று சமூக பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. விவாகரத்து பெறும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நீரிழிவு நோய் காரணமாக கால்கள் துண்டிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. வீதி விபத்துக்களால் தினமும் பலர் அங்கவீனமடைகின்றனர்.

இலங்கையில் வாழும் 10 பேரில் ஆறு பேர் மனநோயாளிகள். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறு வயது பெண்கள் கர்ப்பம் அடைவது, விபச்சார தொழில், புத்தி சுவாதீனம் இல்லாத பிள்ளைகள் என்பன அதிகரித்து வருகின்றது.

இன்னும் 5 வருடங்களில் நாம் எண்ணிப்பார்க்காத அளவில் சமூகப் பிரச்சினைகள் அதிகரிக்கும். இதனால் சமூக சேவை துறையின் பணிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என அனுஷா கோகுல மேலும் கூறியுள்ளார். (செ-11)

## இலங்கை ஒத்...

விசாரணைகளை நடத்த முடியும்.

அப்படியான விசாரணைகள் உலகில் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் சுமந்திரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இராமேஸ்வரம் மீன...

அந்தப் படகு சேதமடைந்தது.

மேலும், படகிலிருந்த வலைகள், மீன்பிடி சாதனங்கள், சி.பி.சி. கருவி மற்றும் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை கடலில் தூக்கி வீசியுள்ளனர்.

பின்னர், படகிலிருந்த முனியசாமி, ஜியன்தாஸ், ராஜ், அருள்சாமி, சங்கர் ஆகிய 5 மீனவர் களையும் கம்பு, பிளாஸ்டிக் பைப், மடிக்கயிறு ஆகியவற்றால் தாக்கியுள்ளனர். இதில் மீனவர் ராஜுக்கு முதுகில் பலத்த காயமும், மற்ற மீனவர்களுக்கு உள்காயமும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து மீனவர்களை பயமுறுத்த வானத்தை நோக்கி பல முறை துப்பாக்கியால் சுட்டு விரட்டியடித்துள்ளனர்.

உயிருக்கு பயந்த மீனவர்கள் காயங்களுடனும், சேதமடைந்த படகுடனும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை இராமேஸ்வரம் திரும்பினர். காயமடைந்த மீனவர்கள் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (செ-11)


## பதவி வெற்றிடம்

1. முகாமையாளர் :- (ஆண் / பெண்)
ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சியும் GCE A/L சித்தி, சர்வதேசத்திலும் உள் நாட்டிலும் பயணிக்கக்கூடியவல்லமை சனி, ஞாயிறு வேலை நாளாகும். வார நாட்களில் ஒருநாள் ஓய்வாகும். (பட்டதாரிகளிற்கு முன்னுரிமை)

2. Clerk :- (பெண்)
ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி. GCE A/L சித்தி சனி, ஞாயிறு வேலை நாளாகும். கிழமை நாட்களில் ஒரு நாள் ஓய்வு

நேர்முகத்தேர்வு 13.04.2014 மு.ப. 10 மணி

Ms.V.இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி
திசைகாட்டு (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(C-7010)

வெளிவந்துவிட்டது
A/L CHEMISTRY MCQ
2009 - 2013 விளக்க உரையுடன்
கிடைக்குமிடம்: அருள்நாயகி புத்தகசாலை
021 5144093, 077 4937585
(C-6981)

FALC
FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெறுக் கொள்ளலாம்... 790 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: 2006ம் ஆண்டிலிருந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஒரு ஆசிரியர்..
ஆரம்பம்: 19.04 Sat 10.30am No. 40, Palaly Road, Jaffna.
ஆரம்பம்: 22.04 Tue 11am No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும்
021 320 2973
077 7894554


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.